ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

லர் 32] பரிதாபி ஆண்டு கார்த்திகைத்திங்கள் 10—12—72 [இதழ் 1



திருவாதிரை நாளில் தில்லைப் பெருங்கூத்தன்
அருள்நடனம் போற்றி அல்லலறுத் தின்புறுவோம்.

தருமை யாதீனக்குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

ஆகம் சிறைச்சாலை
  அக்கரணம் காவலாள்
போகம் புவனம்
  பொருந்துமிடம் — ஓகோ
இதனுட் படுமுயிர்கட்
  கீடேற்றஞ் செய்வான்
அதனுக் கிறைவன்
  அரன். (118)

ஆசிரியர் :
வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்

உ
குருபாதம்
"ஞானசம்பந்தம்"
தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 32 | 10-12-72 | இதழ் 1

உட்பொருள்

எண்		பக்கம்
1	தெய்வத் திங்கள் ...	1
2	ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசிச் செய்தி ...	7
3	"ஞானசம்பந்தம் இதழ்" புத்தாண்டு வாழ்த்து ...	10
4	பல விசிட்ட காரண இயல் ...	12
5	நேரு சொன்ன நீதிமொழிகள் ...	16
6	திருவருட்பயன் விளக்க உரை ...	17
7	திருமந்திரம்— மூலமும் உரையும் ...	22
8	தீப தரிசனம் ...	25
9	ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகள் ...	31
10	குந்தியின் அறவுரை ...	35
11	"சொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான்"	36
12	பாராட்டுப் பணிவுப் பாமலர் ...	40
13	தொடக்கப் பேருரை ...	42
14	கோ (பசு) பூஜையின் மஹிமை ...	46
15	32 அறங்கள் ...	49
16	அருள்மொழியில் "ஐந்து" ...	51
17	செய்திகள் ...	52
18	எதிர்காலம் ...	55
19	முப்பதாம் ஆண்டு மலர்ப் பொருளடக்கம்...	i
20	முப்பத்தொன்றாவது ஆண்டு மலர்ப் பொருளடக்கம் ...	iv

தம்திருப்பேர் தாங்கிவரத் தண்கருணை பாலித்த
நம்முடைய முதற்குரவர் குருஞான சம்பந்தர்.

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 32 | பரிதாபி – கார்த்திகை – 10—12—72 | இதழ் 1

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

தெய்வத் திங்கள்

ஆண்டு, திங்கள், பக்கம், கிழமை முதலிய காலக்கணக்கில், பெரிதும் கருத்திற் கொள்ளப்படுவது 'திங்கள் அல்லது மாதம்' என்பது. திங்கள் பன்னிரண்டில் சிறப்புடையது மார்கழித் திங்கள். இதற்குக் காரணம், இது தேவர்கட்கு விடியற் காலமாயிருப்பதே.

நமக்கு 'ஓர் ஆண்டு' எனப்படும் காலம், தேவர்கட்கு ஒரு நாளாக அமைகின்றது. 'ஒருநாள்' எனப்படுவது பாதி பகலும், பாதி இரவுமாக இருகூறுபட்டு நிற்பதை நமக்கு உள்ள நாள்களில் நாம் கண்கூடாகப் பார்த்து அறிகின்றோம். இது போலவே தேவர்களது நாளும் பாதி பகலும், பாதி இரவுமாய் உள்ளது. அந்த இரு கூறுகளே உத்தராயணமும், தட்சிணாயன மும் ஆகும். உத்தராயணம் தேவர்கட்குப் பகற் காலமும், தட்சி ணாயனம் தேவர்கட்கு இராக்காலமும் ஆகும். 'உத்த

ராயணம்' என்பதற்கு. 'வடபால் வழி' என்பதும், 'தட்சிணாயனம்' என்பதற்கு, 'தென்பால் வழி' என்பதும் பொருளாகும். இக்காலங்களில் சூரியன் இத்திசைப் பக்கமாகத் தோன்றிச் சென்று மறைவதைக் காணலாம்.

ஓர் ஆண்டுக் காலத்தில் ஆறுதிங்கள் உத்தராயணம்; ஆறு திங்கள் தட்சிணயனம். தைமாதம் முதல்தேதி முதல் ஆனி மாத முடிவு வரையில் உத்தராயணம்; ஆடி மாதம் முதல்தேதி முதல் மார்கழி மாத முடிவு வரையில் தட்சிணயனம். இவ்வகையில் தை மாத முதல் தேதியே தேவர்கட்குச் சூரியோதய காலமாகின்றது. எனவே, தை மாதத்திற்கு முந்திய மாதமாகிய மார்கழித்திங்கள் தேவர்கட்கு விடியற்காலமாகிய வைகறைப் பொழுதாதல் தெளிவு. திருமணம் முதலிய உலகியல் செயல்கள் பலவும் நிகழ்வது பெரும்பான்மையும் உத்தராயணத்திலேயாகும். தட்சிணயனத்தில் விரதங்கள் மிகுதி. பகற்காலத்தில் உண்ணும் அளவிற்கு இரவில் உண்ணுதல் கூடாது. இம்முறையில் தட்சிணயனத்தில் விநாயகசதுர்த்தி, நவராத்திரி, மகாசஷ்டி, திருக்கார்த்திகை, மார்கழி என்ற விரதங்கள் அமைந்திருப்பது பொருத்தமே.

ஓர் ஆண்டில், 'மழை, பனி, வெயில்' மூன்றும் இம்முறையில் மாறி மாறி வருதல் இயல்பாகின்றது. எனவே, இவைகளை வைத்து ஓர் ஆண்டுக் காலத்தை, 'மழைக்காலம், பனிக்காலம், வெயிற்காலம்' என மூன்றாகப் பகுக்கலாம். மழைக்காலத்தை, 'கார் காலம்' என்றும், வெயிற் காலத்தை, 'வேனிற் காலம்' என்றும் இலக்கியங்கள் கூறும். வேனிற்காலம், உலக வழக்கில் 'கோடைக் காலம்' எனப்படுகின்றது. 'கோடை' என்பது மேல்காற்றிற்கே பெயர். அதுபோல, 'கொண்டல்' கீழ்க் காற்றிற்கே பெயர். தமிழ்நாட்டில் வெயிற்காலத்தில் மேல்காற்றும், மழைக்காலத்தில் கீழ்க்காற்றுமே வீசும்.

ஓர் ஆண்டினை மேற்குறித்த 'மழை' முதலிய மூன்று காலங்களாகப் பகுப்போமாயின், ஆவணி முதல் நான்கு நான்கு திங்கள் ஒரு பருவமாக அமையும். எனினும், மழை முதலிய மூன்றும் அந்த நான்கு திங்களிலும் ஒரே வகையாய் இருத்தல் இல்லை. முன் இரு மாதங்களில் மிகுந்தும், பின் இரு மாதங்களில் குறைந்தும் காணப்படும். அதனால், பருவங்களை மூன்றாகப் பிரிக்காமல், ஆறாகப் பிரித்தனர் நம் முன்னோர். அவை, கார், (பெருமழை) கூதிர் (சிறு தூறல்) முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பன. இவற்றை ஆவணி முதல் இரண்டிரண்டு மாதங்களாகக் கூட்டியுணர்தல்வேண்டும்.

'முன்பனி, பின்பனி' என்பவை, 'முற்பகல், பிற்பகல்' என்பன போல, 'பனிக்காலத்தின் முற்பகுதி, பனிக்காலத்தின் பிற்பகுதி' எனப் பொருள்படும். இளவேனில், வேனிற் காலத்தின் கட்டிளமைப் பருவம். முதுவேனில், அது முதுமை எய்தியபருவம். ஆண்டின் பகுதியாகிய இவை தமிழில், 'பெரும் பொழுது' என்றும், வடமொழியில் 'ருது' என்றும் சொல்லப் படும். 'ருது' என்பது தமிழ் இலக்கியத்தில் 'இருது' என்று வரும். கார் முதலிய ஆறு பருவங்களும் முறையே 'வர்ஷ ருது, சரத் ருது, சசிர ருது, ஹேமந்த ருது, வசந்த ருது, கிரீஷ்ம ருது' எனவடமொழியில் சொல்லப்படும்.

பனி மிகுந்து காணப்படும் பனிக் காலத்தின் முற் பகுதி யாகிய 'மார்கழி, தை' என்னும் இரு மாதங்களில் முதல் மாத மாகிய மார்கழியில் பனி மிகவும் அதிகமாய் இருக்கும். மக்களுக்கு அமைந்த நாட்களில் சூரியோதயத்திற்கு முன்னுள்ள 'வைகறை' என்னும் விடியற் காலத்தில்தான் பனி மிகுதி. ஆகவே, ஓர் ஆண்டில் பனி மிகுந்ததான மார்கழித் திங்களே தேவர்களுக்கு வைகறைப் பொழுதும், தை மாதப் பிறப்பே பனி குறைகின்ற சூரியோதயமும் ஆகின்றன.

ஒரு நாளில் வைகறைப் பொழுதே தெய்வ வழிபாட்டிற்கு மிகச் சிறந்த நேரம் என்பது யாவரும் அறிந்தது. உறக்கத்தை விட்டு எழவேண்டியதும், எழுந்து இறைவனை நினைந்து திருப் பள்ளி எழுச்சி பாடவேண்டுவதும், குளிர்ந்த நீரில் முழுகி அவரவருக்கு இயன்ற வகையில் இறை வழிபாடு செய்யவேண்டு வதும் எல்லாம் வைகறைக் காலத்திலே இன்றியமையாது நிகழ வேண்டுவன. இவை மற்றைய நாட்களில் எவ்வாறிருப்பினும், தேவர்களுக்குரிய வைகறைக் காலமாகிய மார்கழித் திங்களில் தவறாது செய்யப்படல் வேண்டும். ஏனெனில், தேவர்களும் இம்மாதத்தில் தங்கள் சுவர்க்க போகத்தை நினையாமல், இறை வழிபாட்டில் ஈடுபடுகின்றார்கள். இதற்கு ஏற்பத் தேவ தேவனாகிய சிவபெருமானது சிறப்பு விழாவாகிய ஆதிரைத் திருநாள் இம் மார்கழித் திங்களிலே நிகழ்வதாகின்றது. "ஆரார்வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரை நாள்" என்ற திருப் பல்லாண்டு முதலியவற்றால், திருவாதிரைத் திருநாள் தேவர் பலரும் கூடி வணங்க நிகழ்தல் விளங்கும்.

ஆதிரைத் திருநாள் அதற்கு முந்திய பத்தாம் நாளில் கொடியேற்றி நிகழ்த்தப் பெறுவது. மார்கழி நீராடலை விரித்துப் பேசுகின்ற 'பரிபாடல்' என்னும் சங்க நூலிலுள்ள பாட்டு ஒன்று, இக்கொடியேற்று விழாவையும்தெளிவாகக் குறிக்கின்றது.

ஓர் ஆண்டினை ஆறு கூருகப் பிரித்து, 'பெரும்பொழுது' என வழங்குதல்போலவே, ஒரு நாளினை ஆறு கூருகப் பிரித்து, 'சிறுபொழுது' என வழங்குவர். அவை, 'மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல், எற்பாடு' என்பன. இவை முறையே சூரியன் மறைவுக்குப்பின் பத்துப் பத்து நாழிகை யளவின வாகும். ஓர் ஆண்டுக் காலமாகிய தேவர் நாளில் இவை ஆடி மாதம் தொடங்கி, இரண்டிரண்டு மாதமாகும். மழைக் காலம் நள்ளிரவாய்த் தோன்றுதலே பொருத்தம் என்பதை நினைக்கும் பொழுது, கார் காலமும் கூதிர் காலத்தின் முற்பகுதியும் மாலைக் காலத்தின் பிற்பகுதியில் தொடங்கி, இடையாமத்தோடு முடிதல் பொருந்துவதே. இம்முறையில் கார்த்திகை, மார்கழி இரு மாதங்களும் வைகறைப் பொழுதாயினும், வைகறையின் பத்து நாழிகையில் பின்னுள்ள ஐந்து நாழிகையே சிறப்பாதல்போல, மார்கழி மாதமே சிறப்புடையதாகின்றது. இதனல், வைகறைப் பொழுது தெய்வப் பொழுதாதல்போல, மார்கழி தெய்வத் திங்க ளாகின்றது. 'இத் திங்களில் தெய்வ வழிபாடே சிறப்புற நடத் தல் வேண்டும்' என்பது பற்றி, 'உலகியலாக உள்ள செயல் களில் ஒன்றையும் இதில் நடத்துதல் கூடாது' என முன்னேர் விளக்கியுள்ளனர்.

ஏனைய நாட்களில் எவ்வாறிருப்பினும், மார்கழித்திங்களில் வைகறையில் எழுந்து திருப்பள்ளி எழுச்சி பாடுதல், ஆறு, குளம் முதலியவைகளிற் சென்று குளிர்ந்த நீரில் முழுகுதல், இறைவழிபாட்டினை முறையாகச் செய்தல் முதலியவற்றைத் தவருது செய்தல் வேண்டும். தண்ணீர் அமுதத் தன்மையுடை யது என்பதை, நீர்ப்பாம்புக்கு விடம் இல்லாமைபற்றியே அறிந்துகொள்ளலாம். தண்ணீரில் முழுகுவதால் பல நோய் கள் தீரும்; உடல் வலிமை உண்டாகும். மனம் காமம், குரோதம் முதலிய தீக்குணங்களின் நீங்கித் தூய்மை பெற்று விளங்கும். சூரியோதயத்திற்குமுன் தண்ணீரில் முழுகு தலை மார்கழித்திங்களில் தவருது மேற்கொள்ளவேண்டும்.

மார்கழித்திங்கள் முழுவதும் நோன்பு நாட்களே என்றுலும், திருவாதிரைத் திருநாட்கள் பத்தும் சிறப்பான நோன்பு நாட் களாகும். அந்நாட்களில் மேற்சொல்லியவற்றைச் சிறப்பாகக் கடைப்பிடித்தல் வேண்டும்.

ஆதிரை விழாப் பத்துநாட்களில் திருமுறைகளில் ஏனைய பகுதிகளைத் திருக்காப்புச் செய்துவைத்து, "திருவெம்பாவை' மட்டுமே ஓதிவந்து, திருவாதிரையன்று திருமுறைகளை மீளத்

திருக்காப்பு நீக்கி ஓதுதல் சைவ மரபு. 'திருவெம்பாவையை ஏனைய நாட்களில் ஓதுதல் கூடாது' என்ற மரபும் உண்டு.

கூத்தப்பெருமானுக்கு அபிடேகம் தேவர்நாளில் வரும் ஆறு காலங்களில் மட்டுமே நிகழும். அதில் மார்கழித்திங்கள் திருவாதிரையில் நடைபெறும் அபிடேகம், உஷக்கால அபிடேகமாகச் சிறந்து விளங்குகிறது. தேவர்கட்குக் காலை நேரமாதலால், மார்கழித் திருவாதிரைக் காலைத் தரிசனம் மிகச் சிறப்புடையதாகின்றது. இத்தகைய நலங்கள் பலவும் அமைந்த தெய்வத் திங்களாகிய மார்கழித்திங்கள் அடுத்துவர இருக்கின்றது. அதில் தெய்வ வழிபாட்டினை முறைப்படி செய்தால், ஆண்டு முழுவதும் அவ்வாறு செய்த பயன் உண்டாகும். ஒவ்வொரு நாளும் நாம் வைகறையில் எழுந்து நீராடி இறை வழிபாட்டினைச்செய்து முடித்து, அதன்பின் நமது வேலையைத் தொடங்கினால், அஃது இடையூறின்றி நன்முறையில் முற்றுப்பெறும். அதுபோலவே மார்கழித்திங்களில் வழிபாட்டு முறைகளை நன்கு புரிந்தால், அடுத்து உத்தராயணத்தில் செய்யப்பெறும் திருமணம் முதலிய உலகியல் செயல்களும் நன்கு முடியும். இது பற்றித்தான், 'தைபிறந்தால் வழிபிறக்கும்' என்ற பழமொழி உண்டாயிற்று. ஆதலின், அத்தகைய வழிபாட்டில் அனைவரும் ஈடுபட்டு நற்பயன் பெறுவோமாக.

"ஞானசம்பந்தம்" புத்தாண்டு

நமது "ஞானசம்பந்தம்" – இதமுக்கு 31 ஆண்டுகள் நிறைந்து, 32 ஆவது ஆண்டு தொடங்குகின்றது. சமய இதழாகிய இத் திங்கள் வெளியீடு, வடமொழி தென்மொழிகளில் உள்ள வேதம், சிவாகமம், புராணம், திருமுறை, சாத்திரம், வேறு பல தோத்திர நூல்கள் முதலியன பற்றிய கட்டுரைகள், ஆய்வுகள், நூல்கள், உரைகள் முதலியவற்றாலும், அவ்வப் பொழுதுவரும் விரத நாட்கள், விழா நாட்கள் முதலியன பற்றிய விளக்கங்களாலும், பிறவற்றாலும் சமயத்திற்குச்செய்துவந்துள்ள அரும்பணிகள் பல.

சமயத்தையே முதன்மையாகக் கொண்டதாயினும், இலக்கியம், இலக்கணம், இசை, நாடகம் முதலிய கலை வகை ஆகியவற்றிற்கும், மற்றும் சமுதாய நலத்திற்கும் 'ஞானசம்பந்தம்' கடந்த 31 ஆண்டுகளாக நலம் பல புரிந்துவந்திருப்பதை இவ் விந்திய நாடேயன்றிக் கடல் கடந்த பல தொலைநாடுகளும் நன்கறியும். இத்தகு நலங்கள் பற்றி உளம் மகிழ்கின்ற அன்பர் பலர் இதன் ஆயுள் சந்தாதாரராகவும் ஆகிவருகின்றார்கள்.

ஞானசம்பந்தம் புத்தாண்டுத் தொடக்கத்தில் நேயர்களது நல்வாழ்விற்கும், 'ஞானசம்பந்த'த்தின் வளர்ச்சிக்கும் அருந் துணையாகத் தங்கள் அருளாசியை வழங்கியருளிய தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பொன்னார் திருவடிகட்கு எங்கள் மன மொழி மெய்களாலாகிய வணக்கங்களைத் தெரிவித் துக் கொள்கின்றோம். மற்றும் 'ஞானசம்பந்த'த்திற்குத் தங்கள் தனி, தொடர் கட்டுரைகள், உரைகள், ஆய்வுகள், சிறு கதைகள், கவிதைகள் முதலியவற்றை அளித்துவரும் அறிஞர் பலர்க்கும் எங்கள் உளமார்ந்த நன்றி உரியது.

சென்ற ஆண்டுகளிற்போலவே இவ்வாண்டிலும் நேயர்கள் 'ஞானசம்பந்த'த்தைத் தாங்கள் தொடர்ந்து பெற்று வருதலுடன், மற்றும் பலரையும் பெற்றுச் சமயப் பணி தமிழ்ப் பணி முதலிய பலவற்றிற்கும் உதவிப் பயன் பெறுமாறு செய்விப்பார்களாக.

வருக புத்தாண்டு! வளர்க ஞானசம்பந்தம்!

பதினாறு பேறுகள்

பெரியோர்கள் தம்மால் அன்புசெய்யப் பெறுவார்க்குச் சொல்லும் வாழ்த்துரை இது. பலர் இதற்குப் பதினாறு குழந்தை கள் என்று தவறாகப் பொருள் கருதுகின்றனர். அப்படிப் பதினாறு பெற்றால் பெருவாழ்வு வாழ்வது எங்ஙனம்? இதற்கு அத்தகைய பொருள் இல்லை. உண்மைப்பொருளைக் காளமேகப் புலவர் கூறும் தனிப் பாடலால் அறியலாம். அவை,

'கல்வி, மன உறுதி, வெற்றி, பிள்ளைப்பேறு, துணிவு, செல்வம், தானியங்கள், நன்மை, இன்பம், அறிவு, அழகு, புகழ், அறம், குடிப் பிறப்பு, நோயின்மை, நீண்ட வாழ்நாள்' என்பனவாம்.

"துதிவாணிவீரம் விசையம் சந்தானம் துணிவுதனம்
அதிதானியம் சௌபாக்கியம் போகம்அறிவு அழகு
புதிதாம்பெருமை அறங்குலம் நோயின்மை பூண்வயது
பதினாறுபேறும் தருவாய் மதுரைப் பராபரனே" -காளமேகம்.

(வி. சா. கு.)

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

'ஞானசம்பந்தம்' 32 ஆவது ஆண்டுத் தொடக்க இதழுக்கு

வழங்கியருளிய

ஆசிச் செய்தி

மக்களை மக்களாகச் செய்வன கல்வியும், கேள்வியுமாகும். "கற்றல் கேட்டல் உடையார் பெரியார்" என்று ஞானசம்பந்தரும் அருளிச்செய்தார். 'கல்வி' என்பது ஏட்டுக் கல்வியும், 'கேள்வி' என்பது அக்கல்வியைக் கற்றவர் அக்கல்வி அனுபவத்தால் சொல்வனவற்றைக் கேட்டலும் ஆகும். இவ்விரண்டையும் ஒருங்கே தருவனவாக இக்காலத்தில் அமைந்துள்ளவை, பல வகை இதழ் வெளியீடுகளாகும். ஆகவே, இதழ் வெளியீட்டாளர்கள் தங்களுக்குள்ள பொறுப்பினை உணர்ந்து, அவற்றை நன்முறையில் நடத்துதல் இன்றியமையாதது.

அரசியல், சமூகம், பொருளாதாரம், சமயம் முதலிய அனைத்துத் துறைகட்கும் இன்றைய உலகில் இதழ் வெளியீடுகளே சிறந்த வழிகாட்டிகளாகத் திகழ்கின்றன. இதனை நோக்கும்பொழுது இதழ் வெளியீட்டினை ஒரு தொழிலாகக் கருதி நடத்தாமல், மேற்குறித்த அனைத்துத் துறைகளிலும் நல்ல நோக்கும், ஆழ்ந்த சிந்தனையும் கொண்டு, அவ்வத்துறைகளில் 'தக்கன இவை, தகாதன இவை' என்பவற்றை மக்கள் உளங்கொள்ளுமாறு நேர்மையாகவும், எளிய முறையிலும் எடுத்துக்காட்டிச் சொல்லவேண்டியகடமை, வெளியீட்டாளர்களுக்கு இருத்தல் வேண்டும் என்பது புலனாகும்.

மேற்குறித்த துறைகள் பலவற்றிலும் நாள் வெளியீடு, திங்கள் வெளியீடு முதலிய வகையில் தமிழகத்தில் வெளிவரும் இதழ்கட்குக் குறைவில்லை. ஆயினும் மேற்குறித்த பொறுப் புணர்ச்சியுடன் வெளியிடப்படும் இதழ்கள் எத்தனை என்பதைத் தான் அறிய இயலவில்லை. 'யதார்த்தவாதி வெகுசன விரோதி, உண்மையைச் சொன்னால் உறவற்றுப் போகும்' என்னும் பழமொழிகளின்படி எந்தத் துறையிலும் உண்மையைச் சொல்பவர்க்கு செல்வாக்குக் குறையவே செய்யும். செல்வாக்கின் குறைவு, தொழில் வளர்ச்சிக்கு ஒரு தடையே. அது கருதி விளையும் அச்சத்தால், இதழ் வெளியீடுகள் தங்கள் நோக்கத்திற்கும்,

கடமைக்கும் மாறுன வழிகளிலே சென்று, காதல், பொழுது போக்கு முதலிய வகைகளில் உள்ளத்தைக் கவர்கின்ற கதைகள், ஓவியங்கள் முதலியன நிரம்பிய காட்சிகளுடன் வெளிவருகின்றன. இந்நிலையில் சமயத் தொடர்பான இதழ்களுக்கு உள்ள இடம் அரிதாகும்.

நமது ஆதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானத்தின் அருளாட்சிக் காலத்தில் சமயத்தை முதன்மையாகக்கொண்டு தொடங்கப்பட்டு, 25 ஆவது குருமகாசந்நிதானம் அவர்களால் 26 ஆண்டுகளுக்கு மேலாகப் பல வகையிலும் நன்கு வளர்க்கப்பட்ட 'ஞானசம்பந்தம்' திங்கள் இதழுக்கு 31 ஆண்டுகள் முடிந்து, 32 ஆவது ஆண்டு தொடங்குவது நேயர்கள் அனைவர்க்கும் பெருமகிழ்வைத் தரும். 32 தருமங்கள் போல, இம்முப்பத்திரண்டாவது ஆண்டில் "ஞானசம்பந்தம்" அறநெறியிலும், அருள் நெறியிலும் ஆர்வம் மிக்க அன்பர் பலர்க்கும் நல்லுரை பலவற்றை நல்கி நலம் பயக்கும் என்று நம்புகின்றோம்.

மக்களுக்கு உள்ளது ஊன சம்பந்தம். அதாவது உடல் சம்பந்தமும், அது வழியாக வரும் உற்றார் உறவினர் சம்பந்தமும் ஆகும். இந்தச் சம்பந்தம் உயிர்க்குத் துணைபுரிவதற்குத்தான் இறைவனால் தரப்பட்டது. ஆனால், இஃது உலகியலுக்கே பயன்படுத்தப்படுகிறது. உயிர்க்குத் துணைபுரிய ஞானசம்பந்தம் வேண்டும். அதனை அம்மை தந்த அருட்பாலின் வழியாகப் பெற்றவர் ஆளுடைய பிள்ளையார். அதனால், அவரே 'ஞான சம்பந்தர்' எனப் பெயர்பெற்று விளங்கினர். அவரது திருப்பெயரையே உடையவராய், ஆலவாய்ப் பெருமானது திருவருளையும், கமலை ஞானப்பிரகாசரது நல்லுபதேசமாகிய குருவருளையும் பெற்று விளங்கியவர் நமது ஆதீன முதற் குரவர் ஸ்ரீ குருஞான சம்பந்தர். அவரது திருப்பெயரைத் தாங்கி வெளிவருகின்ற 'ஞான சம்பந்தம்' எத்துணையோ பேர்க்கு ஞானசம்பந்தத்தை வழங்கியுள்ளது - வழங்கி வருகின்றது.

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே" என்ற முறைப்படி பிள்ளைகளைப் பெற்று வளர்த்தோர், "சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" என்றபடி, அப்பிள்ளைகளை நல்லறிவுடையராகச் செய்வதிலும் பெரிதும் அக்கறை கொள்வது இன்றியமையாதது. இவ்வகையில் பெற்றோர்களும், மாணவர்களை உருவாக்குகின்றவர்களாகிய ஆசிரியர்களும் நல்லனவாகிய - சிறப்பாகச் சமயத் தொடர்பாயுள்ள இதழ்களைப் படிப்பதில் அவர்கட்கு ஆர்வத்தை ஊட்டி நல்லாற்றுப்படுத்தக் கடமைப்பட்டவர்கள். சமயத் தொடர்பான இதழ்கள் இளைஞர்களுக்குச் சிறிது கைப்புடையன

போலத் தோன்றுதல் இயல்பு; நோயைப் போக்குகின்ற மருந்து சிறிது கைப்புடையதாகத்தான் இருக்கும். ஆயினும், அதனைப் பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள் ஊட்டத்தான் வேண்டி உள்ளது.

பெற்றோர் பிள்ளைகளை ஏதோ கல்வி நிலையங்கட்கு அனுப்பி விடுவதும், ஆசிரியர்கள் மாணவர்களுக்குத் திட்டத்தில் அமைந்த பாடங்களை நடத்திவிடுவதும் மட்டும் போதமாட்டா; இளந் தலைமுறையினரது நல்வாழ்விலும், நாட்டின் எதிர் காலத்திலும் பெரிதும் நாட்டங்கொண்டு அவற்றிற்கு ஆவன செய்தலில் அயராது முயலுதல் வேண்டும். அத்தகைய முயற்சிக்குத் துணை புரியத் தக்கது 'ஞானசம்பந்தம்' இதழ் என்பதை நினைந்து, நேயர்கள், தாங்கள் 'ஞானசம்பந்தம்' பெற்றுப் பயனடைவதுடன், தங்கள் உறவினர், நண்பர் போன்றவர்களும் 'ஞானசம்பந்தம்' பெறச்செய்து நற்பயன் அடைய இம்முப்பத்திரண்டாவது ஆண்டின் தொடக்கத்தில் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

பார்வையாளர் குறிப்பு

தருமபுரம் ஆதீனம்

ஸ்ரீ சும்பகரேஸ்வரசுவாமி தேவஸ்தானம், திருபுவனம்.

தூத்துக்குடி தெய்விகப் பேரவை அங்கத்தினர் சுமார் ஐம்பதுபேர் இன்று ஸ்தல யாத்திரையாக இங்கு வந்தபோது, எங்களை ஸ்ரீமத் தம்பிரான் சுவாமிகளும், நிர்வாகிகளும் எதிர் வந்து வரவேற்று எங்களது யாத்திரை அலுப்பு நீக்கி உடனிருந்து வழிபாடு செய்வித்ததுடன், குருவருட்பிரசாதமாக ஞான மொழிகளை வழங்கி இல்லறத்தில் இருந்துகொண்டு துறவியாக வாழலாம்; அதற்கு இப்படிப்பட்ட யாத்திரையும், சிவபுராணமும், கோளறு பதிகப் பாராயணமும் செய்து வழிபடுவது நலம் என்று வரலாறு மூலமாக விளக்கி எங்களது உடற் பசியையும், உயிர்ப் பசியையும், ஞானப்பசியையும் நீக்கிப் பேரின்பமடையச் செய்தது போற்றத்தக்கது.

வளர்க சைவம்! வளர்க தெய்வப் பணி!!

(ஓ-ம்) ர. மீனம்மாள்,

காரியதரிசி,

25—11—72. தூத்துக்குடி தெய்விகப் பேரவை.

“ஞானசம்பந்தம்” இதழ்
புத்தாண்டு வாழ்த்து

புலவர். திரு. இரா. செல்வக்கணபதி

1 செந்தமிழே பேராறு ; சமயம் என்னும்
சிறப்புணர்வே இருகரைகள் ; இறைவன் என்னும்
அந்தமிலான் திருவடியே ஆர்க்கும் முந்நீர் ;
அணிநதிமேல் மிதந்தோடும் அழகுத் தோணி
சிந்தைகவர் ஞானசம் பந்தம் என்னும்
சிறப்புமிக்க தருமைவளர் ஞான ஏடு !
விந்தையிலே முப்பத்தோ ராண்டுக் காலம்
விரைந்தோட நெடும்பயணம் விளைத்த துண்மை !

2 மொழிவளர்ச்சிப் பெரும்பணியில் இமயம்! நல்ல
முன்னேற்றக் கருத்துணர்வில் கங்கை ஆறு !
விழிபோலச் சமயநெறி புரக்கும் போக்கில்
விண்எழுந்து ஒளிவீசும் கதிரின் வேகம் !
அழியாத ஆழ்பொருள்கள் விளக்கும் வண்ணம்
அமைந்திட்ட பெருஞ்சிறப்பில் இறைமைத் தன்மை !
ஒழிவில்லா உயர்நெறிகள் வளர்க்கும் பாங்கில்
ஒப்பற்ற தமிழினத்தின் உறுதிப் பாடு!

3 பாராட்டை நோக்காமல் அடக்க மாகப்
பார்புகழ விளங்கிவரும் ஞான ஏடு !
சீராட்டிக் குருமணியின் அருளில் தங்கிச்
சிந்தைகவர் புதுப்பொலிவில் சிறக்கும் ஏடு !

தருமையாதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.

ஞான சம்பந்த நல்லிதழைத் தோற்றுவித்த
ஞான குரவர் நற்றிருத்தாள் போற்றுதுமே.

ஓராட்டைக் கோராட்டை உயர்ந்தே ஓங்கி
உயர்நெறிகள் பரப்பிவரும் உண்மை ஏடு!
பாராட்டிக் கற்கின்றார் நெஞ்சுக் குள்ளே
பக்திநெறி விளக்கின்ற பண்பார் ஏடு!

4 நற்பணிகள் பலவியற்றி முப்பத் தொன்றும்
நல்லாண்டு தான்உழைத்துப் புதிய ஆண்டில்
அற்புதமாய் நடைபோடும் அருமை ஏட்டை
அன்புலகம் வரவேற்றல் கடமை யாகும்!
பொற்புறுநல் நெறிபோற்றிச் சைவம் என்னும்
புகழ்ச்சமய நெறிநிற்போர் உள்ளத் தெல்லாம்
சிற்பரனின் புகழ்பேசும் ஞான ஏடு
சிறக்கட்டும்! புத்தாண்டு செழித்தோங் கட்டும்!

அடி முடி தேடியதன் தத்துவம்

"திருமால் காத்தல் கடவுள் — அவன் துணைவி இலக்குமி; அவள் செல்வத்தின் அதிதேவதை. பிரமன் படைத்தற் கடவுள். அவன் மனைவி சரஸ்வதி; கல்வியின் அதிதேவதை. திருமால் — இலக்குமி, பிரமன் — சரஸ்வதி என்பவர் ஒன்றாகவே பேசப்படுபவர். திருமாலின் செயலைச் செல்வச் செருக்காகவும், பிரமனின் செயலைக் கல்விச் செருக்காகவும் கொள்ளவேண்டும். எனவே, 'செல்வச் செருக்காலோ, கல்விச் செருக்காலோ இறையருளைப் பெறமுடியாது' என்பதே அடி முடி தேடிய வரலாற்றின் உண்மைத் தத்துவம்."

விளக்கம்: வாரியார்

கேட்டு எழுதியவர்:- புலவர். இரா. செல்வக்கணபதி

பல விசிட்ட காரண இயல்

தருமையாதீனப்புலவர், மகாவித்துவான்
திரு. ச. தண்டபாணி தேசிகர்

பலன் - பயம். விசிட்டம் - மிகுதல். பல விசிட்ட காரணம் முன் கூறப்பட்ட ஐவகை யாகங்களும் மிகுந்த பலனை அளிக்க வேண்டுமானல் அவை செய்தற்குரிய இடமும் காலமும் சிறந்தனவாகல் வேண்டும். வித்து நல்லதாக இருக்கலாம். நிலமும் பருவமும் கூடினலல்லது வித்து முளையாது; விளையாது. அதுபோல நாம் செய்யும் சிவவேள்விகளும் செய்யப்படுகின்ற இட விசேடத்தாலும் கால விசேடத்தாலும் மிகுந்த பலனைக் கொடுக்கக் கூடும். ஆகவே அத்தகைய இடம் காலங்களின் சிறப்பினை முருகப் பெருமான் அகத்திய முனிவருக்கு அறிவித்து அருளுகின்ருர்.

அகத்தியரே! இங்கே வாரும், எவன் தனக்குத் தோற்றக் கேடுகள் இல்லாதவனே, எவன் இயங்குவ நிற்பவாக எவற்றினும் உள்ளும், புறமும் பிரிப்பின்றிக் கலந்து நிற்கின்ருனே, எவன் தன்னை விரும்பும் அடியவர்களை மறக்காமல் எக்காலும் அருள் வழங்கிக் கொண்டே இருக்கின்ருனே அத்தகைய பரசிவத்தின் திருவடிகளைத் தியானித்து உனக்குத் தலச்சிறப்பையும் காலச் சிறப்பையும் உபதேசிக்கின்ரேம்; அதனைக் கூர்ந்து கேட்பாயாக.

நாம் கொடுக்கும் பொருள் குன்றிமணியைப் போல் குறைந்ததாக இருக்கலாம். அது காசி முதலான புண்ணியத் தலங்களிலே - கிரகணம் முதலான புண்ணிய காலங்களிலே ஆதரவோடும் அன்போடும் சற்பாத்திரமான மனிதனுக்கு அளிக்கப்படுமானல் மலைபோல வளர்ந்து பேரின்பத்தை விளைவிக்கும்; இது சத்தியம். "தான் சிறிதாயினும் தக்காரின் கை பட்டக்கால் வான்சிறிதாப் போர்த்து விடும்" என்பதல்லவா அறநூல் அறிவிப்பது.

பொருள் சிறிதாயினும் சிவஞானிகளுக்கு அளிக்கப்படுமானல் அது சிவலோகத்தைத் தரும். அங்குப் பலவிதமான போக போக்கியங்களை அனுபவிக்கச் செய்யும். பேரூழிக் காலத்தில் மலத்தைப் போக்கிச் சிவத்தைத் தெரிசிக்க உதவும். அலையற்ற கடல்போல நிலையுற்று ஆனந்தானுபவத்தில் திளைக்கச்

செய்யும் சிவயோகிக்குக் கொடுத்தால் ஒரூழிக் காலம் வளரும். சிவஞானிக்குக் கொடுத்தால் மகாபிலஷயக் காலம் அளவும் பேரின்பத்தை வழங்கும்.

வேண்டிய வேண்டியாங்கு போகங்களைக் கொடுக்கும் தானம் செய்தலும், தீயோம்பலும் ஆகிய இவையெல்லாவற்றிலும் சிவாலயங்கள் உண்டாக்குதலும் எக்காலமும் எக்கணமும் அன்போடு இறைவனை அருச்சித்தலும் ஆகிய சிவபுண்ணியம் சிறந்தது. சிவபுண்ணியம் செய்தபேர்க்கு எல்லாவகையான போகமும் எளிதில் கிடைக்கும்.

தானம் ஏற்கின்றவன் சற்பாத்திரமானால் கொடுக்கின்றவன் பாவக் கடலில் அழுந்துபவனுயிருப்பினும் அவனை உண்மை ஞானமாகிய கையைக் கொடுத்துத் தூக்கிச் சிவலோகமாகிய கரையில் சேர்ப்பிப்பான்.

ஆழமான நீரில் வீழ்ந்து அமிழ்ந்தின கல்லைக் கரைசேர்க்க மரத்தெப்பம் பயன்படுமேயன்றிக் கல் ஒருபோதும் பயன்படாது. அதுபோலப் பாவக்கடலில் தோன்றுகின்ற சுழிகளாகிற பிறப்பு இறப்புக்களில் அகப்பட்டுத் தவிக்கும் ஆன்மாக்களை, சற்பாத்திர மாகிய ஞானிகள்தாம் கரையேற்ற முடியும்; அசற்பாத்திரமான வர்களால் ஒருபோதும் முடியாது.

பாத்திரம் என்ற சொல்லுக்கு, பாவத்திலிருந்து காப்பாற்று பவன் என்பது பொருள். பாவத்திலிருந்து கரையேற்றி, சிவ னடித் தாமரையில் சேர்ப்பிப்பவன் என்பது கருத்துப் பொரு ளாம்.

நாலு வேதங்களையும் இடையறாது ஓதிய கோடி பிராமணர் களுக்கு அறுசுவையுண்டி அளிப்பதைக் காட்டிலும் ஆயிரமடங்கு புண்ணியம் தருவதாம் ஒரு சிவ யோகிக்கு அன்னமளிப்பது. சிவஞானிகளுக்கு ஒருபிடியன்னமாவது பிச்சையிட்டவர்கள் எல்லாக் குற்றமும் நீங்கப்பெற்று ஆணவமலமும் வலிமைகுன்றப் பேரின்பத்தை அடைவார்கள்.

சிவயோகி யார்?

அனாதி முத்த நித்தனாகிய நின்மல சிவத்தை உயிர்க்குயிராக உணர்கின்றவனே சிவயோகி. உணர்ந்து அன்னிய பாவனை யியல் அமர்ந்திருப்பவனே சிவஞானி. அவர்களுக்கு இட்ட அன்னம், அவர்களுக்குச் செய்த பூசை அனைத்தையும் அவர்கள்

உள்ளத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே ஏற்று அருள் செய்கின்ருர். நாம் ஒருவருக்குச் சந்தனம் மலர் முதலிய வைகள் சாத்துகிறேம். அவர்களுடைய உடம்பில்தான் அணிகின்றேம். அந்த உபசாரங்களால் உண்டான மகிழ்ச்சியாகிய பயன் அவருடைய உயிருக்குப் போய்ச் சேருகிறது. அதுபோலச் சிவயோகிக்குச் செய்வது சிவனுக்குச் சேருகிறது. சிவயோகி சிவனுக்குடல். சிவன், சிவயோகியின் உயிர். சிவனுக்குச் செய்யலாமே ; அடியார்களுக்குச் செய்வதேன்? உயிருக்கே எல்லா உபசாரமும் செய்யலாமே; உடலுக்கு ஏன்? என்று என்னை நீ கேட்கலாம். நன்ருக எண்ணிப்பார். உடம்பில்லாமல் எவன் உயிரைக் கண்டவன். நம்முடைய தாய் தந்தை முதலியோர்கள் சிவனடி சேர்ந்த திவசநாள் வருகிறது. அதிலே பற்றற்றுன் பற்றினைப் பற்றி உலகப்பற்றையுதறித் தள்ளிய சிவஞானிகளுக்கு அமுது அளித்தால் அதனல் விளையும் பயன் இருபத்தொரு தலை முறை வரையில் அப்புண்ணியம் அவர்களுக்கு வீட்டின்பத்தைத் தரும். சிலருக்குச் சாமீப முக்தியும் உண்டாகலாம்.

எதேச்சையாக முன்பின் அறிவிப்போ, அழைப்போ சிறிதும் இல்லாமல் ஒரு சிவஞானி நம் வீட்டுக்கு வருவதாக வைத்துக் கொள்வோம். நாம் அவர்களைத் தூரத்தே கண்டவுடன் எதிர் கொண்டு சென்று வணங்கி அழைத்துவந்து அமுதளித்தால் நம்முடைய குலத்தில் பழங்காலம் முதற் கொண்டு வருகின்ற பிதுர்க்களும் சிவலோகத்தையடைவார்கள். இது சத்தியம்.

இல்லறத்தோர்க்கு வரும் பாவங்களும் அவற்றைத் தீர்க்கும் முறைமையும் :

உலகத்தில் உழவு முதலாகிய ஐந்து தொழில்களாலும் பாவங்கள் நிகழ்கின்றன. வீட்டிலே நாள்தோறும் நடக்கும் கூட்டுதல் பெருக்குதல் முதலிய ஐந்தொழில்களாலும் பாவங்கள் விளைகின்றன. அப்பாவங்களனைத்தும் சிவனுக்கும், செந்தீக்குப், சிவநூலைச் செய்யும் தேசிகருக்கும், தவஞ்செய்வார்க்கும் நாள் தோறும் செய்கின்ற சிவபூசை, மகேஸ்வரபூசைகளால் கெடும்.

உணவால் வரும் உயர்வும் தாழ்வும் :

எவனொருவன் தனக்கென்று சமைத்த உணவைச் சிவன் முதலிய அந்நாலுபேருக்கும் ஊட்டி மிச்சத்தை உண்ணுகிருனே அவன் அமிர்தத்தை உண்டவனுகின்ருன். எவன் அவர்களுக்கு அளித்துண்ணுமல் தனித்து உண்ணுகின்ருனே அவன் பிணத்தையும், புழுவையும் தின்ற பாவத்தை அடைகிருன்.

உழுதல், கூலிவேலைசெய்தல், சந்தையில் வாணிகஞ்செய்தல், நாய் குரைத்தாற்போலக் கடுஞ்சொல் பேசுதல் கடுங்கோபம் கொள்ளுதல், பொய்யுரைத்தல் ஆகிய இவைகளாலும் வீட்டிற் குள் அலகிடல், மெழுகுதல், நெருப்புமூட்டல், தண்ணீர் எடுத்தல், அரிசி குற்றுதல் ஆகிய இவைகளாலும் பாவங்கள் வரலாம். இவையெப்படிப் பாவங்களாகுமெனின், எந்தத் தொழிலையும் தனக்கென்று செய்தால் பாவம். பிறருக்கென்றுக் கென்றுசெய்தால் புண்ணியம். சிவயோகிகளுக்குஎன்று செய்தால் சிவசாமீபமும், சிவஞானிகளுக்கு என்று செய்தால் சிவஞானமும் அடையலாகும்.

இக்குற்றங்கள் நீங்கவேண்டுமானால் இத்தொழில்களைச் சிவன் பொருட்டாகச் செய்க; தமக்கு என்று செய்து பாவத் தைத் தேடிக் கொள்ளவேண்டாம்.

இப்பாவங்கள் நீங்கவேண்டின் சிவபூசையும், சிவபுண்ணியங் களும், சிவதோத்திர பாராயணமும், சிவபுராணம் கேட்டலும் செய்க. இவைகளால் பாவங்கள் தேய்ந்து தேய்ந்து அழியும். அதனால் ஆயிரமாண்டுகள் சிவலோகத்தில் வாழலாம். சிவ ஞானியருக்கு அன்னமிட்டபேர்கள் பதினாயிரமாண்டு சிவலோகத் தில் வாழ்வார்கள். விருப்பமுடன் சிறந்த உணவு அளித்தவர்கள் நூறாயிரம் வருடமும், சிவனையே தொழுதவர்கள் பத்துக்கோடி வருடங்களும் சிவலோகத்து வாழ்வார்கள். அதிலும் செஞ்சாலி இராஜசாலி இவற்றால் சமைத்த உணவு அளித்தவர்கள் ஆயிர மாயிரம் கோடியாண்டு அருள் அனுபவத்து ஆழ்ந்திருப்பார்கள்.

பார்வையாளர் குறிப்பு நகல்

தருமபுரம் ஆதீனம்

ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீர்காழி.

சீர்மல்கியே இருக்கிறது சீர்காழி என்பது. பார்க்கப் பார்க்க ரொம்ப ஆனந்தமாக இருந்தது. நல்ல பராமரிப்பு; க்ஷேத்ரமும் பரிசுத்தமாக இருக்கிறது. இவ்வளவு பெரியதாக இருந்தும் பரிசுத்தமாக இருப்பதைப் பார்க்க ரொம்பரொம்ப சந்தோஷம். இதைப் பரிசுத்தமாக வைத்தவர்கள் அனைவருக்கும் பூர்ண ஆசீர்வாதம்.

(ஒ-ம்) சாந்தி,
அம்பத்தூர்.

நேரு சொன்ன நீதிமொழிகள்

மனிதனுடைய கை, மூளை ஆகியவற்றின் விரிந்த வளர்ச்சியே கருவிகள். கருவிகள் மூலமாக உங்கள் கைத்திறனையும் மூளைத் திறனையும் பெருக்காவிட்டால் உங்களுடைய ஆற்றலும் வளராமல் சுருங்கிக் கெடும்.

* * * *

உண்மையான நம்பிக்கைமட்டுமே ஒருவனுக்கு இருக்குமாயின், அந்த நம்பிக்கைமட்டும் மலைகளைக்கூட அசைத்துவிடும்.

* * * *

நெற்றி வியர்வை நிலத்தில்விழப் பாடுபட்டால்தான் செல்வத்தை உண்டாக்கமுடியும் என்பதை நாம் எல்லாரும் நினைவில் கொள்ளவேண்டும்.

* * * *

பணம் பணம் என்றே மக்கள் பேசுகிறார்கள்; பணம் பயனுடையதுதான்; ஐயமில்லை. ஆனால் முடிவான மதிப்பு மனிதனுக்குத்தான்; பணத்துக்கு அன்று. வரலாற்றை உருவாக்கினவன் — மனித சமுதாய முன்னேற்றத்தை உருவாக்கினவன் மனிதன்தான்; பணம் அன்று.

* * * *

ஆணைகள் பிறப்பித்துச் செல்வத்தை உண்டாக்கிவிட முடியாது; உழைப்புத்தான் செல்வத்தைப் படைக்கும்.

* * * *

கொள்கைகளை வகுத்துவிடுவதுமட்டும் போதாது. அது முக்கியமானதுதான். ஆனால் போதிய வேகத்தோடு கொள்கைகளை நிறைவேற்றுவதுதான் அதைவிட முக்கியமானது.

* * * *

ஆற்ற வேண்டிய பணிகளைப் பற்றிப் போதிய அளவு சிந்திக்கப் பலர் முன்வருவதில்லை. அதற்குப் பதிலாக அறிவுரைகள் வழங்கவோ, குற்றங்காணவோ சிறிதும் தயங்குவதில்லை.

— தமிழரசு, 16—11—72

திருவருட்பயன் விளக்க உரை

தருமையாதீனப் புலவர், மகாவித்துவான்,

திரு. சி. அருணைவடிவேல் முதலியார்.

(மலர் 31. இதழ் 12. பக்கம் 647 - இன் தொடர்ச்சி)

8 - ஆம் அதி. இன்புறு நிலை

அஃதாவது, மாசு நீங்கித் தூய்மை பெற்ற உயிர், இறையின்பத்தில் திளைக்கும் நிலைமை. இதனானே, முன்னையதிகாரத்தோடு இதற்குள்ள இயைபு இனிது விளங்கும்.

முதற் குறள்,

" இன்புறுவார் துன்பா ரிருளி னெழுஞ்சுடரின்
பின்புகுவார் முன்புகுவார் பின் "

எனவரும்.

இதன் பொருள் :- துன்பு ஆர் இருளின் எழும் சுடரின் முன் புகுவார்- (பக்குவம் வாராத இக்காலத்து,) துன்பம் நிறைந்த இருளிடத்துத் தோன்றுகின்ற ஒளிக்கு முன்னால் செல்பவர்; பின் பின் புகுவார்-பக்குவம் வந்த காலத்துஅதற்குப் பின்னால்செல்வர்; இன்புறுவார் - அச்செயலின் பயனாக அவர் பேரின்பத்தை எய்துவர்.

விளக்க உரை :- முன்னை யதிகாரத்தில், " உற்கை தரும் பொற்கை " என்னும் குறளால் உணர்த்தப்பட்ட அருள்நிலையால் விளையும் பயனே ஆனந்தநிலை என்பது உணர்த்தியவாறு. இவ்விடத்திற்கு இயைபில்லாத மருள் நிலையின் விளைவு, " துன்பார் இருள் " என உடம்பொடு புணர்த்தமையால் அடங்கிற்று. இவ்வாறன்றி, " துன்பார் " என்றதனை ஒரு சொல்லாகக் கொண்டு, அதற்கும், ' துன்புறுவார் ' எனப் பயனிலையாகப் பொருள் உரைத்து, " முன் புகுவார் " என்பதனை அதற்கு எழுவாயாக்கி நிரனிறையாக வைத்து உரைப்பார்க்கும், அத்தொடர் அனுவாத மாத்திரையாயே நிற்றல் அறிக. " பின் " என்றதனால், ' இன்று ' என்பது பெறப்பட்டது.

இதனால், இன்புறு நிலை உளதாமாறு கூறப்பட்டது.

இரண்டாவது குறள்,

"இருவர் மடந்தையருக் கென்பயனின் புண்டா
மொருவ னொருத்தி யுறின்"

எனவரும்,

இதன் பொருள் :- இருவர் மடந்தையருக்கு என் பயன் - இன்பம் வேண்டித் தம்மிற் கூடலுறுவார்இருவரும் பெண்டிரே யாயின், அக்கூட்டத்தால் எவர்க்கேனும்இன்பம் உண்டாகுமோ! (அவ்வாறன்றி,) ஒருவன் ஒருத்தி உறின் இன்பு உண்டாம்- ஆடவன் ஒருவனும், பெண்டு ஒருத்தியும் தம்மிற் கூடின், இன்பம் உளதாகும்.

விளக்க உரை :- 'உயிரும், அருளும் கூடிய அளவில் இன்ப நிலை உண்டாகாது; உயிரும் அருளுக்கு முதலாகிய சிவமும் கூடியவழியே இன்ப நிலை உளதாகும்' என்னும் பொருளைத் தோற்றுவித்து நிற்றலால், இக்குறள் ஒட்டணி.

யாண்டும் ஒரு துணையின்றித் தனித்து நிற்கும் இயல்பில்லாமையால் உயிரும், பண்பியாகிய சிவத்தையன்றித் தனித்து நிற்றல் கூடாமையால் பண்பாகிய அருளும் பெண்டிரோடு உவமிக்கப்பட்டன. பெத்தநிலையில் கருவிக் கூட்டங்களே உயிருக்குத் துணையாக, அவற்றைப் பற்றி நின்று உயிர் உலகத்தை அறிந்து அனுபவிக்கும். அவ்வனுபவத்தில் விளைவது சிற்றின்பம். அவ்வாறே முத்தி நிலையில் இறைவனது திருவருளே உயிருக்குத் துணையாக, அதனைப் பற்றி நின்று உயிர் இறைவனை அறிந்து அனுபவிக்கும். அவ்வனுபவத்தில் விளைவது பேரின்பம். ஆகவே, கருவிக் கூட்டத்தைப் பற்றி நின்ற அளவிலே உயிருக்குச் சிற்றின்பம் விளையாது, உலகத்தை அறிந்து அதில் அழுந்திய வழியே அவ்வின்பம் உண்டாவது போல, திருவருளைப் பற்றிய அளவிலே உயிருக்குப் பேரின்பம் விளையாது, சிவத்தை அறிந்து அதில் அழுந்தியவழியே அவ்வின்பம் உண்டாகும் என்க. அருள் நிலை கண், பகலவனது ஒளியைப் பெறுவதனோடும், ஆனந்த நிலை, அவ்வொளியைப் பெற்ற கண் அதனானே பகலவனை நோக்கி அவனது பெருமையில் அழுந்தி நிற்பதனோடும் ஒப்பனவாம். ஆகவே, அருள் நிலையே ஆனந்த நிலையன்று; அஃது, அருள் நிலைக்கு அப்பால் உள்ளது என்க.

'கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல்' என்னும் நான்கனுள் தெளிதல் அருள் நிலை; நிட்டை கூடல் ஆனந்த நிலை;

அவ்வாறே சுத்த சாக்கிரம் முதலிய ஐந்தனுள் துரியம் அருள்நிலை. துரியாதீதம் ஆனந்த நிலை. இங்ஙனமாய அவ்விரண்டனது இயல்புகள் இனிது விளங்குதற் பொருட்டே இக்குறட்பாவை ஆசிரியர் அருளிச்செய்தார் என்க.

இதனால், 'துன்பறு நிலைதானே இன்புறு நிலை யாகாது; அஃது அதனின் வேறு' என்பது கூறப்பட்டது. துன்பறு நிலை பாச நீக்கம்; இன்புறு நிலை சிவப்பேறு.

மூன்றுவது குறள்,

"இன்பதனை எய்துவார்க் கீயும், அவற்குருவம்
இன்பகன மாதலினு லில்."

எனவரும்.

இதன் பொருள் :- இன்பதனை எய்துவார்க்கு ஈயும் அவற்கு - இன்பத்தைத் தன்னைப் பெறுவார்க்குத் தருகின்ற முதல்வனுக்கு; உருவம் இன்ப கனம் ஆதலினுல் - வடிவம் இன்பப் பெருக்கே ஆதலால்; இல் - அவ்வின்பத்தைத் தான் நுகர்தல் என்பது அவனுக்கு இல்லை.

விளக்க உரை :- 'இன்பமாயினும், துன்பமாயினும் நுகர்ச்சி யாதல், முன் இல்லதாய்ப் பின் உளதாம் வழியே; ஆதலின், இன்பத்தைத் தன்னியல்பாகக்கொண்டிராத உயிரே இறைவனைச் சார்ந்து, அவனது இன்பத்தைப் புதுவதாக நுகரும்; இன்பம் இறைவனுக்குத் தன்னியல்பாக என்றும் உண்மையால், அதனை அவன் புதுவதாக நுகர்தல் இல்லை' என்றபடி. இது, புதுவதாகச் செல்வம் பெற்றார் அதனால் தருக்குற்று நிற்றலும், தொன்று தொட்டுவந்த செல்வம் உடையார் அவ்வாறு தருக்கி நில்லாமையும் பற்றியும் அறிந்துகொள்ளப்படும்.

இங்ஙனங் கூறவே, "இன்புண்டாம், ஒருவன் ஒருத்தி உறின்" என மேற்கூறிய உவமையே பற்றி, 'முத்தி நிலையில் முதல் வனுக்கும் இன்ப நுகர்ச்சி உளதாம் போலும்' என ஐயுறு வார்க்கு, அவ்வையத்தினைப் பொருந்து மாற்றின் வைத்து நீக்கியவா றுயிற்று. "முத்தி நிலையில் உயிருக்கன்றி முதல் வனுக்கு இன்ப நுகர்ச்சி இல்லை என்பது" "அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்; யாது நீ பெற்றதொன் றென்பால்" * என்பன போன்ற அருட்டிரு மொழிகளால் இனிது விளங்கும்.

---

* திருவாசகம் - கோயில் திருப்பதிகம் - 10.

இதனால், இன்புறு நிலைபற்றி நிகழ்வதோர் ஐயம் அறுக்கப் பட்டது.

நான்காவது குறள்,

" தாடலைபோற் கூடியவை தாநிகழா வேற்றின்பக்
கூடலைநீ யேகமெனக் கொள் "

எனவரும்.

இதன் பொருள் :- தாடலைபோல் - 'தாடலை' என்னும் புணர் மொழி, 'தாள், தலை' என்னும் இருசொற்களது கூட்டமே யாயினும், புணர்ச்சிச் செய்கையால் அவை அங்ஙனம் இரண் டாகக் காண வாராது, ஒருசொல்லாயே நிற்றல்போல; கூடி யவை தாம் நிகழா வேற்று இன்பக் கூடலை - தம்முட் கூடிய உயிரும் சிவமும் வேறு நில்லாத பேரின்பப் புணர்ச்சியையே; நீ ஏகம் எனக் கொள் - மாணவகனே, நீ, உயிரும் சிவமும் ஒன்றுதலாகிய முத்தி முறைமை என்று உணர்வாயாக.

விளக்க உரை :- எனவே, 'உயிரும் சிவமும் ஒன்றுதல்' என்பதனை, 'குடாகாயமும், மகாகாயமும் குடம் உடைந்தவழி ஒன்றுதல் போல்வது' என்வும் 'பதின்மர் சென்றவிடத்து, அவர் ஓர் யாற்றைக் கடந்தபின் தம்மை எண்ணுகின்றுழி, எண்ணுவோன் தன்னை நீக்கி எண்ணிப் பத்தாமவன் எங்கே எனத்தேடி அலமருமிடத்து, அறிவான் ஒருவன் போந்து, நீயே பத்தாமவன் என்றுணர்த்த, தேடியவனே தேடப்பட்ட வனயது போல்வது' எனவும், 'வேட்டுவனால் எடுக்கப்பட்ட புழு, பின் அவ்வேட்டுவனேயாய்த் தன்மையால்ஒன்றுதல் போல்வது' எனவும், 'ஒழுகக் காய்ச்சிய இரும்பில் ஊற்றப் பட்ட நீர், அவ்விரும்பில் ஒடுங்கி ஒன்றுதல் போல்வது' எனவும் இன்ன பிறவாக அவரவர் தத்தமக்குத் தோன்றியவாறே பலபட உரைக்கும் மயக்க உரைகளையெல்லாம் பற்றி மயங்கற்க என்ற தாயிற்று. 'தாடலை' என்பதுபோல, 'காறலை' என்ற புணர் மொழியையும் எடுத்துக்காட்டுதல் உண்டு. இத்தகைய புணர் மொழிகள் வேறும் பல உள எனினும் இவற்றையே எடுத்துக் காட்டுதல், 'தாள் அல்லது கால்' என்பது இறைவனது திருவருளையும், 'தலை' என்பது உயிர்களையும் குறித்தற்குப் பொருந்தி நிற்றல்பற்றியாம்.

" கோளில் பொறியிற் குணமிலவே, எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை "

எனத் திருவள்ளுவ நாயனார் அருளிய திருக்குறளிலும் இக்குறிப்பு அமைந்திருத்தல் அறியத்தக்கது.

'தாடலை' என்பது, 'தாளும், தலையும்' என்றே பொருள் தருதலால், 'உண்மையில் இரு சொல்லே' என்பதும், அவை 'தாள் தலை' எனப் பிரிந்து தமக்குரிய எழுத்துக்களுடன் தோன்றி வேறு நில்லாது ஒரு சொல்லேபோல நிற்றலால், புணர்ச்சி வகையால் ஒன்றாய் நிற்கின்றன என்பதும் இவ் வெடுத்துக்காட்டால் விளங்கும். அதனால், முத்தியிலும், "சுத்த அனு போகத்தைத் துய்க்கின்ற உயிரும், அதற்கு அவ்வின்பத்தைக் கொடுக்கின்ற சிவமும்" ஆகிய இரு பொருளும் கேடின்றி யிருப்பினும், உயிருக்குத் தன்னைப் பற்றிய உணர்வு தோன்றாது அவ்வின்பம் ஒன்றே தோன்ற அதில் மூழ்கிவிடுதலால், 'சிவம்' என்கின்ற ஒருபொருளே உள்ளது போலத்தோன்றும் என்பது அறிந்துகொள்ளப்படும்.

இதனால், முத்தியில் ஆன்மாவும், சிவமும் நிற்கும் முறைமை தெரித்துணர்த்தப்பட்டது.

(தொடரும்)

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adheenam

Sri Panchanathiswaraswami Devasthanam, Thiruvaiyaru.

The public at large owes a debt of gratitude to the late His Holiness the 25th Pandarasannadhi for renovating this ancient sacred temple in a most magnificient manner. I am also delighted that His Holiness 26th Pandarasannadhi is continuing the sacred work. The temple is kept in a most devine manner, so neat and tidy and I must record my appreciations to Supdt. Sri Saravanan.

(Sd.) . N. P. Seshadri,
Secretary,
National Cultural Organisation,
New Delhi.

திருமந்திரம் - மூலமும் உரையும்

திருக்குறள்வேள்

திரு. ஜி. வரதராஜப் பிள்ளை B. A.,

(மலர் 31. இதழ் 12. பக்கம் 679 இன் தொடர்ச்சி)

275. தானொரு காலஞ் சயம்புவென் றேத்தினும்
வானொரு காலம் வழித்துணை யாய்நிற்குந்
தேனொரு பால்திகழ் கொன்றை அணிசிவன்
தானொரு வண்ணம்என் அன்பில்நின் றானே.

தான் ஒருகாலம் சயம்பு என்று ஏத்தினும் - சிவன் தானே ஒருவனாய் நின்ற நாளில் 'சுயம்பு' என்று எண்ணி வழிபடின், வான் ஒருகாலம் வழித்துணையாய் நிற்கும் - வானத்தில் ஒரு காலத்தில் பொருந்தி வழிபடுவார்க்கு உறுதுணையாய் இருக்கும், தேன் ஒருபால் திகழ்கொன்றை அணிசிவன் - தேனையொத்த இன்பந் தரும் சத்தியை ஒரு பக்கத்தில் உடையவனாக பொன்னொளியில் விளங்கும் சிவன் தான் ஒருவண்ணம் என் அன்பில் நின்றானே - தானே ஒரு நிறத்தைப் பெற்று எனது அன்பு வலையில் அகப்பட்டு நின்றான்.

சயம்பு - தான்தோன்றி. சிவன், உருவம் அருவுருவம் அருவம் ஆகிய மூன்றும் கடந்த பொருள். வானம் - ஆகாயம். சிவன் ஆகாயக் கூற்றில் விளங்கி அருளுவான். தேன் ஒருபால் திகழ்சிவன் - மாதொருபாகன். கொன்றை அணிசிவன் - பொன்னொளியில் விளங்கும் சிவன்.

" மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம்
மின்னொளி கொண்ட பொன்னொளி திகழ "
- (திருவண்டப் பகுதி.)

என்ற மாணிக்கவாசகர் வாக்கை ஒப்பிட்டுக் கொள்க.

மரகதம் - பச்சை, சத்தி. பொன்னொளி - செம்மை, சிவன்.

மாதொரு பாகனைப் பக்தரது அன்பு வலையில் அகப்பட் டருளுவான்.

275. முன்படைத் தின்பம் படைத்த முதலிடை
அன்படைத் தெம்பெரு மானை அறிகிலார்
வன்படைத் திந்த அகலிடம் வாழ்வினில்
அன்படைத் தான்தன் அகலிடத் தானே.

முன் படைத்து இன்பம் படைத்த முதலிடை - உலகினைப் படைத்து எல்லா இன்பங்களையும் அமைத்தருளிய சிவனிடம், அன்பு அடைத்து எம்பெருமானை அறிகிலார் - அன்பினைச் செலுத்தி எல்லா உயிர்க்கும் தலைவனாகிய இறைவனை அறியாது கெடுகின்றனர். வன்பு அடைத்து இவ்வுலக வாழ்வினில் - உறுதியைத் தந்து இவ்வுலக வாழ்க்கையில், அன்பு அடைத்தான்தன் அகலிடத்தானே - அன்பைப் படைத்த சிவன் அகண்ட உலகமாகவும் உள்ளான்.

இன்பம் படைத்தலாவது, வேண்டுவார்க்கு வேண்டுவதைத் தானே அறிந்து ஈதல்.

"வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ"

என்ற மணிமொழியும் இக் கருத்துப் பற்றியதேயாம். எம்பெருமானை அறியாமையாவது, எம்பெருமானது இவ்வியல்பினை அறிந்து நன்றி செலுத்தாமை. வன்பு - வலிமை, அல்லது உறுதி என்னும் பொருளது. வன்பாவது, சிவமே பரம்பொருள் என்னும் உறுதி. அகலிடம் - அகண்ட இடம். சிவன் போகமாகவும், புவனமாகவும் உள்ளான் என்க.

இன்பம் படைத்த பெருமானிடம் அன்பைச் செலுத்த வேண்டும். 7

277. கருத்துறு செம்பொன்செய் காய்கதிர்ச் சோதி
இருத்தியும் வைத்தும் இறைவஎன் றேத்தியும்
அருத்தியுள் ஈசனை யாரருள் வேண்டில்
விருத்தி கொடுத்திடும் விண்ணவர் கோனே.

கருத்துறு செம்பொன்செய் காய்கதிர்ச் சோதி - கருத்திலே பொருந்துகின்ற உருக்கு முகத்துப் பிரகாசிக்கும் செம்பொன்னைப் போன்ற சோதி வடிவானவனை, இருத்தியும் வைத்தும் இறைவ என்று ஏத்தியும் - நினைத்தும்; அமைத்து வைத்தும், அவனையே தலைவ என்று ஏத்தியும், அருத்தியுள் ஈசனை யார் அருள் வேண்டில் - உள்ளத்தில் அன்புகொண்டு அவனை யார் அருள வேண்டினும், விருத்தி கொடுத்திடும் விண்ணவர் கோனே - தேவர் கோனாகிய அவன் அவ்வொளியில் நின்று சிவ ஒளியைப் பெருகச் செய்வான்.

காய்கதிர்ச் சோதி - உலையில் காய்ச்சிய பொன்போன்று விளங்கும் அக்கினிப் பிழம்பு. இருத்தலும், வைத்தலும், ஏத்த

ளும், சோதியை வழிபடும் முறையாம். அருத்தி - அன்பு. விருத்தி - வளர்ச்சி.

சோதி வடிவானவனை நாளும் அன்போடு வழிபட்டால் ஒளி பெருகச் செய்வான். 8

278. நித்தலுந் துஞ்சும் பிறப்பையுஞ் செய்தவன்
வைத்த பரிசறிந் தேயு மனிதர்கள்
இச்சையு ளேவைப்பர் எந்தை பிரான்என்று
நச்சியே அண்ணலை நாடகி லாரே.

நித்தலும் துஞ்சும் பிறப்பையும் செய்தவன் - உயிர்களின் வினைக்கீடாக நாளும் இறப்பையும் பிறப்பையும் அமைத்தவன், வைத்த பரிசு அறிந்தேயும் மனிதர்கள் - வைத்த முறைமையினை அறிந்திருந்தும் மக்கள், இச்சையுளே வைப்பர் - உலக போகத்தில் விருப்பத்தைச் செலுத்துவர், எந்தை எம்பிரான் என்று நச்சியே அண்ணலை நாடகிலாரே - எந்தை எம்பிரான் என்று விரும்பி அண்ணலாகிய சிவனை நாடவில்லை.

துஞ்சுதல் - இறத்தல். பரிசாவது, வினைக்கீடாக அமைத்த தன்மை. பிறப்பையும் இறப்பையும் வினைக்கீடாக அமைத்தவன் சிவன். நச்சுதல் - விரும்புதல். அண்ணல் - வள்ளல். பிறப்பு நீங்க அண்ணலை நாடவேண்டும் என்க.

உலகப் பொருளை விரும்புவதை விட்டு மெய்ப்பொருளை விரும்பவேண்டும். 9

279. அன்பினுள் ளான்புறத் தானுட லாயுள்ளான்
முன்பினுள் ளான்முனி வர்க்கும் பிரானவன்
அன்பினுள் ளாகிஅமரும் அரும்பொருள்
அன்பினுள் ளார்க்கே அணை துணை யாமே.

அன்பின் உள்ளான் - தன்னை அறியும் அன்பு கொண்டவரிடம் அவ்வன்பில் நின்றருளுவான். புறத்தான் - தன்னில் நிற்பதுபோலவே பிறரிடம் நிற்பவனும் அவனே. முன்பின் உள்ளான் - உலகத் தோற்றத்துக்கு முன்னும், உலக அழிவுக்குப் பின்னும் அழியாது நிற்பவன். முனிவர்க்கும் பிரான் - ஆத்ம விசாரணை செய்யும் முனிவர்க்கும் அவனே தலைவன். அவன் அன்பின் உள்ளாகி அமரும் அரும்பொருள் - அவனிடம் யார் ஒருவர் அன்புகொண்டாரோ அவரிடம் நிலையாகப் பொருந்தும் அரிய பொருளாயுள்ளவன். அன்பின் உள்ளார்க்கே அணை துணையாமே - அன்பின் வழி அவனை அணுகுவோர்க்கு அவன் துணையாக இருந்து உய்விப்பான்.

இறைவன், அன்பினுள்ளார்க்குப் பொருந்துகின்ற துணையாவான். 10

[தொடரும்]

சிறுகதை

தீப தரிசனம்

செஞ்சொற்கொண்டல், புலவர்

திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip. Ling.,

[1]

" நம்முடைய பகுத்தறிவு இயற்கையாக நாம் பெற்றுள்ள பெருஞ்சிறப்பாகும். இதனைக் கொண்டு எதனையும் பகுத்துப் பார்த்து நன்மை தீமை யாவையென அறிந்து உயர்வு பெற வேண்டும். மூட நம்பிக்கைச் சேற்றில் அழுந்தி விடக்கூடாது; குருட்டு நம்பிக்கை என்ற இருட்டிற் கிடந்து தடுமாறும் மனித குலத்திற்கு ஒளிகாட்டும் கை விளக்கே பகுத்தறிவு" என்று வீர முழக்கமிட்டார் அறிவழகர். அவருடைய அறிவு நலம் ததும்பிய உரைக்கிடையில் பலமுறை மக்கள் கையொலி கேட்ட வண்ணம் இருந்தது. "எவ்வளவு அழகாகப் பேசுகிறார்" என்று வியந்தனர் பலர். "பேச்சென்றால் இதுவல்லவா பேச்சு" என்று பாராட்டினர் பலர். "அறிவு விருந்தாக அமைந்து விட்டது ஐயாவின் பேச்சு" என்று அழகுநடையிற் பாராட்டினர் ஒருவர். இவ்வாறு அந்தப் பெருங்கூட்டத்தின் பாராட்டைப் பெற்றுப் பேச்சை முடித்துக்கொண்டு காரில் ஏறிப் புறப்பட்டார் அறிவழகர்; பகுத்தறிவுப் பேச்சாளர்.

சிரித்த முகத்துடன் விடைபெற்றார் அவர். பலர் அவருடைய கடைக்கண் பார்வைக்கு, எவ்வளவோ பாடுபட்டு இலக்காகிக் கூனிக் குறுகிப் பற்கள் தெரியச் சிரித்து மகிழ்ந்தார்கள். சிலர் கூட்டத்தில் முண்டியடித்துக்கொண்டு முன்னே வந்து அவர் கால்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டார்கள்; சிலர் கையோடு கொண்டு வந்திருந்த ரோசா மலர்களை அவர் கால்களில் வைத்துக் கும்பிட்டு எழுந்தார்கள். எல்லாவற்றையும் அன்புடன் ஏற்றுக்கொண்டு காரில் ஏறி உட்கார்ந்து கரங்களைக் குவித்தார் அறிவழகர். 'டிரைவர்' தங்கமுத்துவைப் பார்த்துக் கைகளை அசைத்தார். வண்டி புறப்படுவதற்கு முன்பாகப் பரபரப்புடன் ஓடி வந்த, அவ்வூர் மன்றச் செயலர் மருத நாயகம் ஒரு காகித உறையை அறிவழகர்

கரங்களில் வைத்து, அவர் செவிகளுக்கு மட்டுமே கேட்கக் கூடிய குரலில் கிசுகிசுத்தார்: "தங்கள் பேச்சுக்கென்று பொது மக்களிடம் பெற்ற நன்கொடை; பெரிய மனதுவைத்துத் தாங்கள் எங்கள் ஊர்க்கு வந்து, இவ்வூர்ப் பகுத்தறிவுக் கூடத்தில் ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஊரப்பர் திருவுருவப் படத்தைத்திறந்து வைத்ததற்கு ஏதோஎங்களால்முடிந்தகாணிக்கை". "அதனலென்ன, மருதநாயகம்!" என்று கூறியபடி அந்த உறையை வாங்கிப் பைக்குள் இட்டுக்கொண்டார் அறிவழகர்.

மருத நாயகத்திற்கு மட்டுமே கேட்கக் கூடிய குரலில் பின் வரும் சொற்களைத் திருவாய் மலர்ந்தார் அறிவழகர்; "கூடிய விரைவில், என்னுடைய முழு உருவப் படம் ஒன்றைத் திறந்து வைப்பதற்கான ஏற்பாடு செய்யுங்கள்; விவரம் நம்முடன் இருக்கட்டும்." மருத நாயகம் தலையைப் பலமாக ஆட்டினர்; அறிவழகரின் 'அந்தரங்கத்'திற்கு உரியவராகத் தம்மை ஆக்கிக் கொண்டதில் அவருக்குப் பெருமகிழ்ச்சி.

வண்டி புறப்பட்டது; "அறிவழகர் வாழ்க" என்று முழங்கினர் மருதநாயகம். உடன் நின்ற நண்பர்கள் அவருடைய குறிப்புத் தெரியாமல் சும்மா நின்ருர்கள்; கைகளை அவர் ஆட்டியதுதான் தாமதம், குறிப்பைப் புரிந்துகொண்டவர்களாய் 'வாழ்க, வாழ்க" என்று உடன் முழங்கினர்கள். வண்டியில் சில அடிகள் தூரமே சென்றிருந்த அறிவழகர் செவிகளில் அந்த முழக்கம் அமுதமாக, தேனகப் பாய்ந்தது.

(2)

"மனிதன் அறிவு ஒன்றையே நம்பி வாழ்ந்திட வேண்டும்; நம்பிக்கைக்கு அடி பணிந்திடக்கூடாது" என்ற கோட்பாட்டை உயிர் மூச்சாகக் கொண்டு உழைத்து வருபவர் அறிவழகர்; அவர் அதிகமான நூல்கள் படித்ததில்லை. ஆனல் படித்தது போலப் 'பாவனை' செய்வதில் அவர் சமர்த்தர். பெரும் பெரும் நூலாசிரியர்கள் பெயர்கள் எல்லாம் அவர்க்குத் தலைகீழ்ப்பாடம். நண்பர்களோடு — அதாவது அவர் கோட்பாட்டிற்குத் தலையாட்டும் கூட்டத்தோடு அவர் பேசிக்கொண்டிருக்கும் உரையாடலிலும் சரி, மேடையில் ஏறி வீர முழக்கமிடும்போதும் சரி, எவ்வளவோ அறிஞர்களின் பெயர்களை அவர் அவ்வப்போது வாரி வீசுவார். 'அவர் சொன்னர்' 'இவர் சொன்னர்' என்று அடுக்குவார். 'இவர் என்ன சொன்னர்' என்று யாரும் கவலை கொள்வதும் இல்லை. அவரை எதிர்த்துக் கேட்பதும் இல்லை. அப்படி ஒரு 'நியாய உணர்வுக்கு' ஒத்துப்போகும் கூட்டம் தான் அவருக்குப் பின்னல் இருந்துவந்தது.

அன்றும் அப்படித்தான். அவ்வூர்ப் பகுத்தறிவுக் கூட என்ற ஓர் அமைப்பிற்கு அவரைப்பேச அழைத்திருந்தார்கள். ஊராட்சி ஒன்றியத்தின் பணிகளோடும் பொருளாதாரத்துடனும் நெருங்கிய உறவு கொண்டிருந்தவரான ஊரப்பனின் 'திருவுருவப்' படத்தைத் திறந்து வைத்தார் அவர்.

"தாங்கள்தான் உருவ வழிபாடு முதலிய மூட நம்பிக்கைகளுக்கு எதிரியாயிற்றே; இந்தப் படம் ஊரப்பனுடையது என்று எப்படி நம்புகிறீர்கள்" என்று யாரும் அவரைக் கேட்கவில்லை.

"கோயில்களில் உருவங்களை வைத்து வழிபாடு செய்வதையும், மாலைகள் போடுவதையும், மலர்கள் இட்டு அருச்சனை செய்வதையும் நான் கடுமையாகக் கண்டிக்கின்றேன்; இவற்றையெல்லாம் எதிர்த்து ஒவ்வொரு சிற்றூரிலும் ஒவ்வொரு பேரணி திரள வேண்டும்" என்று அடிக்கடிப் பேசிவருபவர் அவர். அப்படிப்பட்டவர் ஊரப்பன் படத்தைத் 'திருவுருவப்' படம் என்று மதித்து மாலையிட்டுப் பாராட்டிப் போற்றிப் பேசியது சரிதானா? அதுவும் ஒரு வகையில் மூட நம்பிக்கைதானே என்று யாரும் கேட்கவில்லை.

அவரது கால்களைத் தொட்டுச் சிலர் கண்களில் ஒற்றிக் கொண்டபோதும் சரி, ரோசாமலர்களைத் தூவிக் கும்பிட்ட போதும் சரி, "என்னை ஏன் இவ்வாறு தெய்வமாக்குகிறீர்கள்; இத்தகைய மூட நம்பிக்கைதான் இந்த நாட்டைக் குட்டிச் சுவராக்கி விட்டது" என்று அவர் தடுத்துச் சில வார்த்தைகள் கூறவும் இல்லை; அவருடைய கோட்பாட்டிற்கு மாறுபட்ட இந்தச் செய்கையை அவர் அனுமதித்தது பொருத்தமில்லையல்லவா என்று யாரும் கேட்கவில்லை.

[3]

அன்று திருக்கார்த்திகைத் திருநாள். அறிவழகர் வீடு அந்தத் தெருவிலேயே உயர்ந்தவீடு. பல ஆண்டுகளுக்கு முன்பு — அதாவது அறிவழகர் அறிவுக் கோட்பாடுகளைக் குறித்து எதிர்ப்புக் குரல் எழுப்பும் நிலையில் இல்லாதபோது, அவ்வளவு உயர்ந்ததாக அந்த இல்லம் இல்லை; தாழ்ந்த ஓலைக் குடிசையும் ஒட்டுத் திண்ணையுமாக இருந்தது. அறிவழகர் தம்முடைய பெயரை, — காத்தமுத்து என்ற பழம்பெயரை — தம்முடைய கோட்பாட்டிற்கேற்ப "அறிவழகர்" என்று மாற்றிக் கொண்டு, இந்நாட்டிலே ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வேரூன்றி விட்டதாக அவரால் வருணிக்கப்பட்ட மூட நம்பிக்கையின் அடிக்கிழங்கையே அகற்றிவிட்டுப் பகுத்தறிவு விதைகளைத்

தூவிப் பாத்திகட்டிக் கொண்டிருக்கும்போதே அவருடைய தாழ்ந்த ஓலைக் குடிசையை உயர்ந்த ஓட்டுவீடாகக் கட்டிக் கொண்டும்விட்டார். இந்த உண்மை அந்த ஊரார்க்குத் தெரிந்தாலும், அறிவழகர்க்கும் அவருடைய அருமைத் தோழர் கட்டும் அஞ்சியே அவரை எதிர்த்து ஒரு சிறு குரல்கூடக் கொடுக்கவில்லை என்று கேள்வி.

பெரிய கார் அவருடைய வீட்டின் முன் வந்து நின்றது. அறிவழகர் இறங்கவும், அவருடைய துணைவியார் எண்ணற்ற அகல் விளக்குகளை ஒரு பலகையில் ஏந்தியவாறே வாயிற்கதவுகளைத் தாண்டி எதிர்வரவும் சரியாக இருந்தது. "வாங்க, வாங்க! எங்கே அந்திசாயும் நேரத்திற்குள் வராமல் இருந்து விடுவீர்களோ என்று பார்த்தேன்" என்று கூறியவாறே விளக்குகளை 'வராந்தா' சுற்றுச் சுவர்கள் மீதும் மாடங்களின் உள்ளும் வரிசை வரிசையாக வைக்கலானார் அவருடைய துணைவியார்.

சிரித்தபடியே அதனை ஏற்றுக்கொண்டவர் உள்ளே புகுந்தார்.

"திருக்கார்த்திகையன்று திருவண்ணாமலைக்குச் செல்ல வேண்டும்" என்று சொல்லிக்கொண்டிருந்தீர்களே — என்று கூறியவாறே பின் தொடர்ந்தார் மனைவியார், அவருடைய பெயர் 'செயலட்சுமி' என்றிருந்ததை, "வெற்றித்திரு" என்று பின்னாளில் மாற்றிவிட்டார் அறிவழகர்.

"மெதுவாகப் பேசு, வெற்றித்திரு! திருவண்ணாமலைக் கார்த்திகையன்று வேறு கூட்டம் ஒன்று அதே ஊரில் ஏற்பாடு செய்துவிட்டு அதற்குப் போவதுபோல் அன்று அங்குச் சென்று வர வேண்டும் என்றுதான் கூறினேன். ஆமாம்; அதனால் இப்போதென்ன கெட்டுவிட்டது! திருவண்ணாமலைக் கடவுள் கண்ணால் எரித்துவிடப் போகிறாரா என்ன" என்று கூறிப் பெரிதாகச் சிரித்தார் அறிவழகர்.

"ஐயோ, அப்படியெல்லாம் பேசாதீங்க. வேறு யாருடனாவது விளையாட்டாப் பேசலாம். திருவண்ணாமலையார் கண்கண்ட. தெய்வங்க. வேண்டிக் கொண்டாலும் வேண்டிக் கொள்ளாவிட்டாலும் நாம் ஒருமுறை போய்விட்டுத்தாங்க' வரவேண்டும். இந்த வருஷம் போக முடியாவிட்டாலும் அடுத்த வருஷத்திலாவது நிச்சயம் போய்வருவோங்'க! தீபதரிசனம் செய்துவிட்டு வந்துவிடுவோம்" என்றார் வெற்றித்திரு. அவர் கண்களில் பக்தி பரவசத்தால் நீர் மல்கியிருந்தது.

"நீஒன்று, வெற்றித்திரு ! நான் சொன்னால் சொன்னதுதான். நம்முடைய அறிவுக்கு மீறி என்ன வந்துவிடும் என்று நினைக்கிறாய் ? நாம் நினைத்தோம், விட்டுவிடுகிறோம். இதற்குமேல் கடவுளாவது, நினைப்பாவது, தெய்வமாவது, கோபமாவது ! இந்தப் பத்தாம்பசலிக்கொள்கைகளை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது" என்று கூறியவர் வேகமாக மாடிப்படிகளில் ஏறிப்போனார்.

வெற்றித்திரு - அவருடைய மனைவியார் மனத்திலோ தம் கணவரது பேச்சு பெரிய அச்சத்தை உண்டாக்கியது. மனம் போனபடி வாழ்வதும், அறிவு அறிவு என்று அறிவு வாதம் பேசி அலைவதும், சொல்வேறு செயல்வேறு என்று வாழ்வதும் எங்குக் கொண்டுவிடுமோ என்று அவர் மனம் நடுங்கியது.

[4]

"ஐயா, ஐயா" என்ற பரபரப்பான குரலுடன் நான்கைந்து ஆட்கள் இந்த நேரத்தில் உள்ளே ஓடிவந்தனர். "என்னப்பா, என்ன என்ன" என்று பதறினார் மனைவியார். "நம் வைக்கோற் போரும் அதைச்சேர்ந்த நெற்கிடங்கும் தீப்பற்றிக் கொண்டதாம், அணைக்க முடியவில்லையாம்" என்று வந்தவர்கள் சொல்லக் கேட்டதும், மாடியிலிருந்து இறங்கி ஓடிவந்தார் அறிவழகர்.

தீயணைக்கும் நிலையத்திற்குச் செல்ல ஆட்களை அனுப்பி விட்டுக் காரில் விரைந்தார். அங்கிருந்து இரண்டு மைல் தொலைவிலுள்ள தம் நிலப்பகுதிகட்கு அவர் கார் செல்வதற்குள் தீக் கொழுந்துகளின் திருவிளையாடல் தீவிரமடைந்து விட்டிருந்தது.

நெடுந்தொலைவில் வேகமாகச் சென்றது பெரியகார். அவரே இயக்கிக்கொண்டிருந்தார். பக்கத்தில் வெற்றித்திரு உட்கார்ந்திருந்தார். தூரத்தில் செல்லும்போதே இருட்டில் - தீயின் ஒளியும் புகையும் தெரிந்தன. ஆட்கள் ஓடி ஓடி அணைப்பதில் ஈடுபட்டிருந்தனர். இருண்டு கிடந்த வானத்தில், தாரகைகள் கண்சிமிட்டிக்கொண்டிருந்த அடிவான விளிம்பில், சிவந்த தீயின் நாக்குகள் ஒளி வெள்ளத்தை உமிழ்ந்து கொண்டிருந்தன. அந்தப் பகுதிக்குத் தீயணைப்பு நிலையத்தினர் வருவதற்கும், அறிவழகர் கார் செல்வதற்கும் எல்லாம் எரிந்து தணிவதற்கும் சரியாக இருந்தது.

காரை நிறுத்திவிட்டுச் சிறிது தொலைவில் சென்று நின்றார் அறிவழகர். பக்கத்தில் மனைவியார் மௌனமாக நின்றார்; ஆட்கள் தீயணைக்கும் முயற்சியில் ஒய்ந்து நின்றனர். "திருவண்ணாமலைக் கடவுள் எரித்துவிடப் போகிறாரா என்ன" என்று சற்றுமுன் அவர் கூறிய சொற்கள் அவர் நினைவில் எழுந்து சுழன்றன.

அண்மையில் உள்ள கிராமப் பஞ்சாயத்து வானொலி ஒன்றில் யாரோ ஒரு சமயச் சொற்பொழிவாளருடைய இன்னிசைச் சொற்பொழிவு ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. "தீப மங்கள ஜோதி நமோநம" என்ற திருப்புகழ் வரி காற்றினிலே மிதந்து வந்தது.

அறிவழகருடைய உள்ளத்தில் அவரையும் அறியாமல் முதன்முதலாக ஒரு சிலிர்ப்பு ஏற்பட்டது. தம்முடைய பகுத்தறிவுக்கும் அப்பாற்பட்ட ஏதோ ஓர் ஆற்றல் தம் நெஞ்சில் தாண்டவம் ஆடுவதை அவருடைய அடிமனம் அநுபவித்தது. அவருடைய கண்களிலும் கண்ணீர் மல்கியது; அதை அவருடைய மனைவியார் கவனிக்கத் தவறவில்லை. அவருடைய வளையலணிந்த கைகள் தம்மை யறியாமல் குவிந்தன.

பார்வையாளர் குறிப்பு

தருமையாதீனம்

ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீர்காழி.

தோணிபுரம் வர இன்று எங்களுக்குக் கொடுத்துவைத்தது; தூய்மையின் உறைவிடமாய் விளங்கும் இவ்வாலயம் என்றும் இறை உணர்வை வளர்க்க வழிகாட்டும். எங்களுக்குக் காட்சி தந்த இறைவனை மீண்டும் வாழ்த்துகிறோம். அவன் என்றும் எங்களுக்கு அருள்பாலிக்கட்டும். தருமை ஆதீனப் பணி நாளும் வளர்க.

(Sd) நா. குழந்தைவேல்,
இயக்குநர். சிறுசேமிப்புத்துறை
தமிழ்நாடு அரசு சென்னை.

ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகள்

திருமுறைக் கலைஞர்

வித்துவான். திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்

தோற்றமும் கல்விப் பயிற்சியும் :

ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகள் " பாண்டி நாடே பழம்பதி " எனப் புகழப்பெற்ற செந்தமிழ் வழங்கும் தென்பாண்டிநாட்டின் கண்ணே திருநெல்வேலிப்பதியில் பரம்பரைச் சுத்தசைவவேளாளர் மரபில் வந்தவர்.* இவர் இளமையிலே கணக்காயர் ஒருவரிடம் தமிழ் நெடுங்கணக்கைப் பயின்றவர்; நுண்ணறிவும் நற்குணமும் நல்லொழுக்கமும் சைவ சமயப் பற்றும் உடையவராகத் திகழ்ந்தவர்; கருநிறமும் உயர்ந்த தோற்றப் பொலிவும் கொண்டு விளங்கியவர்.

அக்காலத்தே, திருநெல்வேலிபொருநைநதி (தாமிரபரணி)க் கரையிலுள்ள சிந்துபூந்துறையில் திகழும் தருமையாதீன மடாலயத்தில் ஸ்ரீ வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் † என்பவர் பெரும் புகழுடன் வீற்றிருந்தார்; அவர் அங்கே தம்மையடுத்த பல மாணவர்களுக்கு இலக்கண இலக்கியங்களைக் கற்பித்துக்கொண்டு சிறந்த போதகாசிரியராக விளங்கி வர

---

* இவரது பெற்றோர் பெயர், இவரது இயற்பெயர் முதலியன அறிதற்கில்லை. இவர் தமக்கு ஞானகுருவாகிய தருமை ஸ்ரீ திருஞானசம்பந்தர் திருவடிகளைத் தம் மனமாகிய கோயிலின்கண் இருத்தி வழிபட்டவர். அதனால் சம்பந்த சரணாலயர் எனப் பெயர்பெற்றார் என்பர். சரண + ஆலயம் — சரணாலயம்; சரணம் – திருவடி.

† இவர் திருவாரூரில் தோன்றியவர்; காசிசென்று ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகளிடம் வடமொழி தென்மொழிகளைப் பயின்றவர் ; தருமை ஐந்தாவது குருமகாசந்நிதானத்திடம் சைவ சந்நியாசமும் ஞானோபதேசமும் பெற்றவர் ; சிந்துபூந்துறைத் தருமை மடாலயத்தில் பலகாலம் வசித்தவர் ; கவிபாடும் திறமும் பேசும் ஆற்றலும் படைத்தவர் ; முத்தி நிச்சயம் ஞானாவரணம் என்ற நூல்களுக்குப் பேருரை கண்டவர் ; துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் முதலியோர்க்கு வித்தியாகுருவாக விளங்கியவர் ; தில்லையிலே சென்று அரனடி அடைந்தவர்.

லானூர். அதனை அறிந்த சம்பந்த சரணாலயர் தம்பிரான், சுவாமிகளிடம் சென்று வடமொழியினையும், தென்மொழியில் நிகண்டு, இலக்கணம், தருக்கம் முதலிய கருவி நூல்களையும், இலக்கியங்களையும் நீதி நூல்களையும் நன்கு கற்றுணர்ந்தார்; அதனால் இவர், கவிபாடும் வல்லமையும், பேசும் திறமையும் பெற்றார்; குரு லிங்க சங்கம பக்தியில் முதிர்ச்சியுற்றார். சம்பந்த சரணாலயரின் கல்வி முதிர்ச்சியை அறிந்த தம்பிரான் சுவாமிகள் அவரைத் தருமையாதீனத்திற்குச் சென்றுவரப் பணித்தார்.

குருமூர்த்தி தரிசனம் :

அப்பொழுது சம்பந்த சரணாலயர், தமது வித்தியா குருவின் சொற்படி, முன்தவத்தின் துணையினால் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தை அடைந்து, அவ்வாதீனத்தின் ஆறாவது பட்டத்தில் சைவசித்தாந்த ஞானபானுவாய் எழுந்தருளியிருந்த குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளைத் * தரிசித்து வணங்கி, "எளியவனை ஓர் அடியவனாக ஆட்கொள்ள வேண்டும்" என்று இரந்துநின்றார். சம்பந்த சரணாலயரது கல்வி முதலிய நிலைமையினை உணர்ந்த குருமூர்த்திகள் அவருக்குச் சமய விசேட தீட்சைகளையும் யாத்திரை காஷாயமும் அருளினார்கள்.

அதன்பின்னர் சம்பந்த சரணாலயத் தம்பிரான் அவர்கள், சிலகாலம் வேளூர், சீகாழி, திருவெண்காடு, தில்லை முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு மீண்டும் தருமையாதீனம் வந்தடைந்து, சிவாலயதரிசனம், குருவழிபாடு முதலியன செய்து கொண்டு இருந்து வரலானார்.

சைவ சந்நியாசம் பெறுதல் :

ஒருநாள் சம்பந்த சரணாலயத் தம்பிரான் அவர்கள் தமது பரமாசாரிய சுவாமிகளைத் தரிசித்து வணங்கும்போது, பிறவிப் பெருங்கடலைக் கடக்கப்பெறும் புணையாகிய சைவ சந்நியாசத்தைப் பெறக் குறிப்பாகக் கூறித் துதித்தார். அப்போது குருமூர்த்திகள் மிகமகிழ்ந்து அவருக்கு மந்திரகாஷாயம் (சைவ சந்நியாசம்) அளித்து, ஞானதீட்சையும் ஞானோபதேசமும் செய்து ஞானபூசை அருளி, 'சம்பந்த சரணாலயர்' என்ற தீட்சா நாமமும் சூட்டி ஆட்கொண்டருளினார்கள்.

ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகள் (முனிவர்) தம் குருமூர்த்திகளிடம் மிக்க அன்பும் பக்தியும் அடித்தொண்டும் பூண்டு சிவ ஞானம் கைவரப்பெற்றவராய் ஆதீனத் திருக்கூட்ட அடியார்

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்.



இருபத்தா றரையாண்டு இவ்விதழை வளர்த்திட்ட
குருகயிலைச் சுப்ரமண்ய குரவரது அருளுருவம்

குழாத்துடன் தருமையம்பதியிலே இருந்து கொண்டு சிவாகமங்களையும் சைவசித்தாந்த சாத்திரங்களையும், பண்டார சாத்திரங்களையும் ஐயந்திரிபற ஓதி உணர்ந்தார். அப்போது தம்மை அடுத்த அன்பர்களுக்குக் கல்வி புகட்டிக்கொண்டும், புராணப் பிரசங்கம் முதலியன செய்து கொண்டும் வந்தார். அதனல் சுவாமிகளது புகழ் தமிழ் நாட்டிலும் பிற இடங்களிலும் மிகப் பரவலாயிற்று.

அச்சமயம் மைசூர் மன்னராயிருந்தவர் கன்னடம், தெலுங்கு, வடமொழி, தமிழ் முதலிய மொழிகளில் வல்லவரும் முருகக் கடவுளிடம் மிகுந்த பக்தி கொண்டவருமாகிய பெட்ட தசாமராஜ உடையார் II என்பவர். அவர் சமயநூல்களை ஆராய்வதில் பெரு விருப்பம் கொண்டிருந்தார். அதனல் பற்பல சமயசாத்திரங்களில் வல்ல அறிஞர்கள் பலரை ஆங்காங்கிருந்து வருவித்து அவர்கள்மூலம் தமக்கிருக்கும் ஐயங்களை எடுத்துக் கூறி அவற்றிற்கு விளக்கம்பெற விரும்பினர். பற்பல இடங்களிலுள்ள சமயத்துறையில் வல்ல அறிஞர்களை மைசூருக்கு அனுப்பும்படி அரசர்கட்கும் மடாதிபதிகட்கும் திருமுகங்கள் அனுப்பி வைத்தார். தருமையாதீனத்திற்கும் திருமுகம் வந்தது. ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஸ்ரீ சம்பந்த சரணலய சுவாமிகளையே மைசூர் சென்று வரப் பணித்தருளினர்கள்.

சுவாமிகள் மைசூர் செல்லல் :

ஸ்ரீ சம்பந்த சரணலய சுவாமிகள் அவர்கள் குருமூர்த்திகளின் அருளாசியினைப் பெற்றுக்கொண்டு ஒரு நன்னாளில் மைசூர் சென்ருர்; முன்னர் தமது வரவை அரசர்க்கு அறிவிக்குமாறு செய்துவிட்டு ஸ்நானம், நியமானுட்டானம், பூசை, செபம் முதலியவற்றைச் செய்துகொண்டு, பிறகு பற்பல சமயப் புலவர்கள் கூடிய அரசவையிற் சென்று சிறப்புடன் வீற்றிருந்தார்.

அப்போது அரசவைக்குச் சென்ற மன்னர், சமயப்புலவர்கள் கூடியிருந்த சபையின்கண் எழுந்தருளியுள்ள, சுவாமிகளைக் கண்டு வணங்கி முகமன் கூறினர்; பிறகு சுவாமிகளது கரிய திருமேனியின் தோற்றப் பொலிவைச் சற்று நோக்கித் தம் அருகிருந்தார் ஒருவரைப் பார்த்து, "இவர் ஓர் அண்டங்காக்கையோ" என்று மெல்ல நகையாடி வினவினர். அச்சொல் சுவாமிகளின் செவியில் விழ, அவர்கள் புன்னகை கொண்டு, "அரசே! அது நான் அல்லன் ; தாங்களே" என்று பதிலளிக்கையில் அரசரின்முகம்

சிறிது மாறுபட, அதனை அறிந்த சுவாமிகள், மீண்டும் அரசரைப்பார்த்து, "மன்னர் பெருமானே! யாம் கூறியவற்றை ஏதோ தவருக நினைந்தீர்கள் போலும்; அண்டத்தை (உலகத்தை)க் காக்கும் (ஆட்சி புரியும்) வல்லமை உங்களுக்கே அன்றி எமக்கு ஏது? ஆதலின் அவ்வாறு புகன்றேம்" என்று கூற, அரசர் சுவாமிகளது சொல் திறனை வியந்துமிக்க மகிழ்ச்சி அடைந்தார்.

பிறகு அரசர், சுவாமிகளைத் தம் அருகு இருத்தி, தருமையாதீனத்தில் தங்கள் குருஸ்தானத்தில் நாடோறும் திருக்கூட்டத்தவர்கள் (அடியார்கள்) செய்வன யாவை? என்று வினவியபோது சுவாமிகள் சிறிதும் தயங்காமல்,

"ஆய்வார் பதிபசு பாசத்தின்
உண்மையை; ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல்
லாம்; கல்வி கேள்வி அல்லால்
ஓய்வார்; சிவானந்த வாரியுள்
ளோஒன் றிரண்டுமறத்
தோய்வார்; கமலையுள் ஞானப்ர
காசன்மெய்த் தொண்டர்களே."

என்ற ஒரு பாடலால் பதிலளித்தனர். அதனைக்கேட்ட அரசர் "தருமைத் திருக்கூட்ட அடியார்களின் தன்மைகள் இவ்வாறு பின், அவர்களை ஆட்கொள்ளும் ஞானசிரியரின் பெருமை அளவிட்டுக்கூற இயலாது" என்று உணர்ந்தார். சுவாமிகளின் தவவொழுக்கச் சிறப்பினையும் சைவசீலத்தினையும், பழுத்த புலமையினையும் கண்டு போற்றிப் புகழ்ந்தார்.

பின்பு, பற்பல புலவர்களை நோக்கித் தமது ஐய வினக்களை எழுப்பி, அவற்றிற்குச் சுவாமிகள் கூறும் விளக்கமே தமது அறிவில் சிறப்பாகத் தோன்றுவதை அறிந்து மகிழ்ந்தார். சுவாமிகளைச் சிறிதுகாலம் தம் சமஸ்தானத்தில் இருக்குமாறு வேண்ட, சுவாமிகளும் அதற்கு இசைந்தருளினர்கள். அதன் பின் அரசர், சமயத்துறையில் வல்ல அறிஞர்களை அவரவர் தகுதிக்குத் தக்கவாறு உபசரித்து அனுப்பினர்.

[தொடரும்]

குந்தியின் அறவுரை

குருக்ஷேத்திர யுத்தம் முடிந்ததும் கண்ணன், குந்திதேவியை அணுகி "இதுவரை கஷ்டப்பட்டாய், இப்பொழுது உன்மகன் தருமன் அரசோச்சுகிருன். உனக்கு நல்வாழ்வு பிறந்துவிட்டது. ராஜமாதா ஆகிவிட்டாய்; இன்னும் ஏதேனும் குறை பாடுகள் இருந்தால் அதனைத் தெரிவி; அதற்குத் தக்கது செய்கிறேன்" என்று கேட்கவும் குந்திதேவி, "கண்ணு இதுவரை நான் கஷ்டப்பட்டது உண்மை. இன்று வாழ்வு மலர்ந்திருப்பதும் உண்மை. இந்த இரு உண்மைகளுக்கிடையில் உலகுக்கு உபதேசமாகத்தக்க ஓர் உண்மை உறைந்து கிடக்கிறது. அதனைப்பற்றித்தான் நான் சிந்திக்கிறேன்" என்ருள்.

"உலகு பற்றிய உண்மையா, அதனை விளக்கவேண்டு" மென்று, கீதாசாரியனை கண்ணன் கேட்க, குந்தி சொன்னுள்; "மனிதன் இன்பமாக வாழும்போது உற்ருர் உறவினர் என்று பலர் உறவுகொண்டாடி வருவார்கள். சுற்றமும் நட்பும் சூழும். ஆனல் துன்பம் மனிதனுக்கு நேரிடும்போது உற்ருர், உறவினர் என்று ஓடிவந்த அனைவரும் ஓடிவிடுவார்கள். சுற்றமும் நட்பும் தூர விலகிவிடும். உடன் இருப்பவர்களும் பகைத்துக் கொள்வார்கள். துன்பம் நேரிடும்போதுதான் மனிதன் தனித்துவிடப்படுகிருன். எல்லோரும் கைவிட்ட மனிதனை இறைவன் ஏற்றுக்கொள்கிருன். அப்பொழுதுதான் மனிதன் இறைவனைச் சரணடைகிருன்.

நான் கஷ்டப்பட்டபோதெல்லாம், உன்னையே நினைந்து தவங்கிடந்தேன். கஷ்டம் அதிகரிக்க அதிகரிக்க உன்னை நெருங்கி நின்றேன். இறைவன் திருவடிகளைச் சார்ந்திருக்கும் ஒருவன் சுபிக்ஷத்திற்காக உலகமே சுபிட்சம் அடைகிறது. உன் திருவடியைச் சார்ந்திருந்த காரணத்தால், ஒரு குருக்ஷேத்திர யுத்தத்திற்குப் பிறகு பாரதத்தில் தர்ம ராஜ்ஜியம் அமைக்கப் பட்டிருக்கிறது. இந்த ராஜ்ஜியத்தைப்பற்றி நினைந்து நான் மகிழ ஆரம்பித்தால் உன்னைப்பற்றிய நினைவு என் மனதினின்று போய்விடும். அப்பொழுது நீயும் விலகிச் சென்று விடுவாய். நல்ல ஜீவனுக்கு உன்னைப்பிரிந்து இருப்பதைவிட பெரிய துன்பம் உலகில் வேறெதுவும் இல்லை.

இனியும் இடைவிடாத துன்பங்கள் எனக்கு வந்துகொண்டே இருக்கட்டும். அந்தத் துன்பங்களிடையே உன்னை மறவாமல் உன் திருவடி சார்ந்து அதைத் தொழுகின்ற பாக்யம் எனக்குக் கிட்டட்டும். அப்பொழுது என் அருகில் நீ இருந்து கொண்டே யிருப்பாய். நீ அருகில் இருக்கும்போது எதையும் தாங்கும் இதயம் படைத்து அதில் ஆனந்தம் பெறுவேன்"

—எழுத்தாளன், 15—7—71

"கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான்"

வித்துவான். திருமதி. ப. நீலா

(மலர் 31. இதழ் 12. பக்கம் 676 இன் தொடர்ச்சி)

56. இடைக் காடன் பிணக்குத் தீர்த்தது

இந்திரனின் பழிதீர்த்தருளிய கங்கை மணாளன் புலவர்களின் பிணக்கைத் தீர்த்தபின், இங்கே தென்னனை முனிந்து தன்னைத் தொழுதுபோன இடைக்காடனின் பின்போய்ப் பிணக்கறுத்த இயல்பைக் கூறுவோம்.

நாளும் சோமசுந்தரப் பெருமான் திருமேனியில் சண்பகப் பூக்களைச் சாத்தி - இவர் சண்பக சுந்தரனே என்று அவனை அனுபவித்த சண்பக மாறன் விண்ணுலகடைந்தபின் பிரதாப சூரியன், வங்கிசத்துவசன், இரிபுமருத்தனன், சோழ வங்கி சாந்தகன், சேரவங்கி சாந்தகன், பாண்டிவங்கி சேசன், வங்கிச சிரோன்மணி, பாண்டீச்சுரன், குலத்துவசன், வங்கிசபூடணன் சோம சூடாமணி, குல சூடாமணி, இராச சூடாமணி, பூப சூடா மணி யெனப் பதினன்கரசர்கள் அரியணையிலிருந்தார்கள். அவர் களுக்குப் பின் குலேச பாண்டியன் பட்டத்திற்கு வந்தான். தன்தோள்மேல் தொல் நிலந்தாங்கி அரசோச்சத் தொடங்கிய அவன் இலக்கிய இலக்கணப் புலமை நிரம்பியவனாக விளங்கி னான். ஆதலால் அவனுக்குச் சங்கப் பலகையும் இடங்கொடுத்துப் பெருமை தந்தது.

மாபெரும் புலவனாக இவனே விளங்குவதைக் கேட்டு இடைக்காட்டைச் சார்ந்த புலவன் மிகச் சிறந்ததொரு தென் மொழிப் பனுவலோடு இவனைக் காணவந்தான். குலேச பாண்டியன் இடைக்காடனின் சொல்லாழமும், பொருளாழமும் மிக்க கவிதைகளைக் கேட்டான். உள்ளத்தெழுந்த அழுக்காறு காரணமாக சிரந்துளக்காமலும், வாய்திறந்து பாராட்டாமலும் இருக்கவே, கோபம்கொண்ட இடைக்காடன் சரேலென்று அவ் விடம் விட்டகன்று பெருமானின் திருக்கோயிலுக்குச் சென்றான்.

இறைவன் திருமுன் விழுந்து பணிந்து "தமிழறியும் பெருமானே - பாண்டியன் பொருட்செல்வம் போலக் கல்விச் செல்வமும் பெற்றிருக்கிறான் என்று கேள்விப்பட்டு, அவனுழைப் பாடல் கொண்டு சென்றேன்; பாடலைக் கேட்டு உணர்வுபெறாத கடலோ, கழியோ, விலங்கோ, புள்ளோ, மரமோ, மலையோ, வன்மைசேர் பாலையோ என்றெண்ணும் வண்ணம் அஃறிணையாய் அசையாதிருந்து அவமதித்தானே! அவன் என்னையா இகழ்ந்தான் - இல்லை இல்லை - சொல்வடிவாய் நின்னிடம் பிரியா இமையப் பாவை தன்னையும், சொற்பொருளான உன்னையுமன்றோ அவமதித்தான்" என்று பலபடக் கதறிவிட்டுத் தன் னில்லம் சென்றான் புலவன்.

கபிலரின்பால் பெருமதிப்பு வைத்திருந்த இடைக் காடனுக்கும், அக்கபிலருக்கும் உள்ளம் குளிரவேண்டும் என்பதற்காக இறைவன் திருக்கோயிலின் உள் உள்ள இலிங்க உருவை மறைத்துவிட்டுத் தானும் தன் தேவியுமாக வடக்கு நோக்கிச் சென்று, வைகை நதியின் தென்கரையில் ஓராலயம் கண்டு அங்கிருந்தான். மறுநாள் காலை இறைவனைப் பள்ளியெழுச்சிக் காலத்தில் பணியவந்த பக்தர்கள் பெருமானை அங்குக் காணமல் அலமந்து நின்றனர். பின்னர் மன்னவனுக்கு இதனை அறிவிப்பேம் என்று விரையும் போதில் ஆவியன்ன நாயகரைப் பிரிந்த நங்கைபோல, திருமகளைப் புறங்கொடுத்த தாமரைபோல் நகரம் பொலிவுகுன்றியிருக்கக் கண்டனர்.

அரசனை நெருங்கி அச்சத்தோடு அவர்கள் இச்செய்தியினைச் சொல்ல, அரசன் தன் காதில் அழல் வேல் செருகப் பட்டது போல் துடிதுடித்து உயிரற்ற உடலென மண்ணில் வீழ்ந்தான்; சிறிது போது சென்றபின் உணர்வு பெற்று "எம்பெருமானே! எங்குச் சென்றொளித்தாய்; எங்கள் பால் எப்பிழை கண்டு மறைந்தாய்; எம்மாருயிரே! பழைய சிவலோகத்திலோ – அருவி கொட்டும் வெள்ளி மலையிலோ – தம்மை மறந்து உன்னையே நினைப்பார் மனத்திலோ – வாழ்த்தும் வேதங்களின் தலையிலோ எங்குச் சென்றுறைந்தாய்!" எனக் கதறித் தவிக்கும் போது, சிலர் வந்து "மன்னா ஓர் அதிசயங் கண்டோம். பிரமன் படைத்த நாள் தொட்டு இன்று வரை கண்டறியாத காட்சியது. தமிழ்வல்ல புலவர்களுடன் ஆலவாய் இறைவன் அங்கயற் கண்ணியையும் அழைத்துக் "கொண்டு வைகையின் தென்கரையில் அமர்ந்துள்ளான்" – என்று பணிந்து கூறினர்கள்.

உடனே மன்னன் மனந்தேறி, தெவ்வர் முடித்தொகை மிடறும் கழற் காலால் நடந்து எந்த ஆலயத்தை வைகை தன் திரை நெடுங்கரத்தால் மலர் தூவிப் பணிகிறதோ அந்த ஆலயத்தை வந்தடைந்தான். அங்கே உலகீன்ற அன்னையோடு ஐயன் அமர்ந்திருக்கக் கண்டு உள்ளமும் ஊனுமுருக அவர் கனச் சொல் மலரால் வழிபட்டான். "வேதந் தொடர்ந்தறியா அடிசிவப்ப நகர்நனி புலம்ப இவண் வந்த காரணம் என்ன ஐயனே! அடியேன் என்ன பிழை செய்தேன். என்னுடைய தமரோ பகைவரோ - கள்வரோ உமக்குத் தீங்கியற்றினரா! அல்லது வேதம் பயின்ற அந்தணர் அறம் தவறினரா! தவமும் தருமமும் சுருங்கினவோ! இல்லற துறவற தர்மம் பிழைத்ததோ - யாது நேர்ந்தது" என்று பதைபதைத்தான்.

அல்லதையென் தமராலென் பகைஞராற்
கள்வரா லரிய கானத்
தெல்லை விலங் காதிகளா லிடையூறின்
தமிழ் நாட்டி லெய்திற்றுலோ
தொல்லை மறை யவரொழுக்கம்
குன்றினரோ தவந்தருமம் சுருங்கிற்றுலோ
இல்லறனும் துறவறனும் பிழைத்தனவோ
யானறியே னெந்தா யெந்தாய்.

நாட்டில் இவைபோன்ற அறங்கள் நலிந்தால் தெய்வம் கோபிக்கும் என்பதைப் பரஞ்சோதியார் தக்க விடத்தில் காட்டும் திறம் உணர்தற்குரியது.

இறைவன் பாண்டியனை நோக்கி 'உன் தோத்திரத்திற்கு மகிழ்ந்தோம். மிகச் சிறப்பு வாய்ந்த இம்மதுரையில் அசுரர், இயக்கர், சித்தர், இரக்கம் விட்ட ராக்கதர், தேவர், முனிவர், மனிதர் ஆகியோர் ஸ்தாபித்து வழிபட்ட பல இலிங்கங்கள் உள்ளன. அப்படிப்பட்ட அறுபத்து நான்கு இலிங்கங்களில் அட்டதிக்குப் பாலகர்களால் பூசிக்கப்பட்ட எட்டு வடிவங்கள் உயர்ந்தவை. அவற்றுள்ளும் இத்திருவுரு நம் தோழனுகிய குபேரன் வழிபட்டதாகும். அதனுல் இங்கு வந்தோம். இன்று முதல் இவ்விடம் 'வடதிருவாலவாய்' என்று வழங்கப்பெறும். நீ இடைக்காடனின் தமிழை அவமதித்ததனுல் - அவனிடம் நாம் கொண்ட அருளால் இங்கு வந்தோம்' என்று ஆகாச வாணி மூலம் அருளினர்.

வேந்தன் தன் பிழையுணர்ந்து சிறியோர் செய்தபிழையைப் பெரியோர் பொறுப்பது இயற்கைதானே – என்று பணிமொழி கூறி இறைவனை ஆலவாய்த் திருக்கோயிலுக்கு எழுந்தருளச் சொல்லிவிட்டு அரண்மனை மீண்டான். பின் இடைக்காடனை மிகச் சிறப்போடு அழைத்து ஆசனத்தமர்த்தி தானும் அரியாசனத்திலமர்ந்து பனுவல் வாசிக்கக் கேட்டு இடைக் காடனுக்கும் மற்றையோருக்கும் சிறப்போடு ஆரம், ஆடை, ஆரணங்குகள், நிதிநிறை வேழம், விளைநிலம் எல்லாம் கொடுத்து, காலால் ஏழடி பின் நடந்து வழியனுப்பி வைத்தான். பின் புலவர்களிடம் 'அடியேன் இடைக்காடனுக்குச் செய்த அபராதம் பொறுக்க வேண்டும்' என்று இறைஞ்சினன். அவர்களும் சினம் மாறி மகிழ்வுற்றனர். அதோடு ஆலவாய் இறைவனினருளால் எல்லாவித பாக்கியங்களு முண்டாகுமென்று ஆசி கூறினர்.

பலகாலம் சென்றபின் குலேசனின் தவமே உருமாறி வந்தது போல் அரிமருத்தன பாண்டியன் அவனுக்கு மகனாக வந்து பிறந்தான். குலேசனும் தன் புதல்வனிடம் தக்கபடி புவியாட்சியை ஒப்பு வித்து விட்டு இறைவனின் திருவடி நிழலில் கலந்து இன்புற்றான். (வளரும்)

மார்கழி மாதச் சிறப்பு நாட்கள்

15—12—72	தனுர்மாத பூஜாரம்பம், தருமையாதீனம் 11 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிகர் குருபூசை.
16—12—72	வைகுண்ட ஏகாதசி.
18—12—72	மகாப்பிரதோஷம், வேளூர்க் கிருத்திகை.
20—12—72	பௌர்ணமி மாத பூஜை.
21—12—72	ஆருத்திராதரிசனம், சடையநாயனர் திருநக்ஷத்திரம்.
22—12—72	தருமையாதீனம் 2ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிகர் குருபூசை.
27—12—72	இயற்பகை நாயனர் திருநக்ஷத்திரம்.
30—12—72	மானக்கஞ்சாற நாயனர் திருநக்ஷத்திரம்.
1— 1—73	மகாப்பிரதோஷம்.
4— 1—73	அமாவாசை, சாக்கிய நாயனர் திருநக்ஷத்திரம்.
9— 1—73	மகாவியதீபாத புண்ணியகாலம்.
11— 1—73	வாயிலார் நாயனர் திருநக்ஷத்திரம்.
13—1—73	போகிப்பண்டிகை.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியின் வெள்ளிவிழாவில்
கல்லூரியைப் புரந்தருளியும்
25—10—72 புதன்கிழமை காலை நடைபெற்ற இரண்டாம்நாள்
நிகழ்ச்சிக்கு வாழ்த்துரை அருளியும் அருள்பாலிக்கும்
தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவடிகட்கு

அன்புடன்சூட்டிய

பாராட்டுப் பணிவுப் பாமலர்

மலிவளஞ் செறியும் கலிபுகா நகராம்
பெருமை சேர்தரு தருமையம் பதியில்
அமிழ்தினை வென்ற தமிழ்மொழி வளரத்
தவம்பல வளர்க்கும் சைவசித் தாந்தச்
செந்நெறி வளர்க்கும் இந்நிலன் தன்னில்
வந்தருள் செய்த செந்தமிழ்க் கதிரோன்
உருவும் திருவும் அருளும் பெற்ற
மருவருண் மனத்து குருஞான சம்பந்தக்
குரவனது அருள்வழி வருமர பதனில்
இருபதோ டாருக எழுந்தருள் குருவே
சண்முக தேசிக ஞானசம் பந்த!
உண்முக மாக நண்ணிய சிவத்தின்
அருளினைத் தேக்கி மருளகல் உளத்தில்
பாய்ச்சிடும் பரம! வாய்ப்புடை வளர்செறி
செந்தமிழ்க் கடலை நிலைகண் டுணர்ந்து
நந்தமர் உய்ய வந்தருள் குரவ!
அன்பும் அருளும் துன்பகல் சிந்தையும்
நண்ணிய பெரும கண்ணிய கங்கை
வதியும் சடையுடை கதிதரு பெருமான்
மலரடி மறவா நிலவிய ஞான
மழைபொழி கொண்டால்! வாழ்த்துதும் நின்னை

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்



இன்றெமது நல்லிதழைப் புரந்துவரும் எம்முதல்வர்
மன்னுபுகழ்ச் சண்முகதேசிகரருளின் திருத்தோற்றம்.

கயிலைக் குருமணி பயில்வுற அமைத்த
கல்லூரி யென்னும் நல்வயல் அதனுள்
வளர்ந்து வளர்தரு உளஞ்செறி ஞானப்
பயிராம் நின்னால் செயிரிலாக் கல்வியை
மயர்விலா தடையும் மாணவக் குழுவேம்
வாழ்த்துதும் வாழ்த்துதும்! வாழ்த்துதும் பல்கால்!
வளர்ந்த கல்லூரியை வளர்க்கும் பொறுப்பு
வளர்த்த பல்லோருள் வாய்த்தது நினக்கே;
இதனை இதனால் இவன்செய்யும் எனவே
அதனை அவன்கண் அமைத்தாட் கொள்ளும்
செந்தமிழ்ச் சொக்கன் திருவருள் எமக்கு
வெள்ளி விழாக்கொள் கல்வி நிலையம்
பல்வகை யானும் நல்வள முற்று
மணிவிழாக் கொண்டு அணிபெறத் திகழும்
வாய்ப்புற் றதுவென வாழ்த்துதும் பெரிதே.

இங்ஙனம்,

தருமபுரம், 25—10—1972

வெள்ளிவிழாக் குழுவினர்
தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.

மனக்கவலை மாற்ற மருந்து

இராகம் - செஞ்சுருட்டி] [தாளம் - ஆதி

பல்லவி

மனக்கவலை மாற்ற மருந்து தில்லை
மன்றினுள் ளாடி மயக்கும் மருந்து (மன)

அநுபல்லவி

மாளா நோய்களை மாய்க்கும் மருந்து
மறுமையைப் போக்கிடும் அபய மருந்து (மன)

சரணம்

நினைப்பவர் நெஞ்சினில் நிற்கும் மருந்து
நிந்தனைக் கஞ்சார்க்கும் அருளும் மருந்து
அன்பினைத் தூண்டிடும் அற்புத மருந்து
ஆனந்தத் தேனைச் சொரியும் மருந்து. (மன)

— உ. ர. உமாநாத தீக்ஷிதர்

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி வெள்ளிவிழாவில்
24—10—72 அன்று தமிழ்நாடு ஆளுநர்

மேதகு. கே. கே. ஷா அவர்கள்
ஆற்றிய

தொடக்கப் பேருரை

இந்து சமயத் தத்துவம் :

இந்து சமயத் தத்துவம் என்பதுதான் என்ன? நாம் தொடங்குமிடம், நாதப்ரம்மம். அடுத்து வேதங்கள், தொடர்ந்து உபநிடதங்கள்; வேத உபநிடதங்களுக்குப் பின் இராமாவதாரமும், கிருஷ்ணவதாரமும் நிகழ்கின்றன. இராமாவதாரத்திற்கும், கிருஷ்ணவதாரத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டை உணர்ந்தீர்களாயின், இந்துத் தத்துவத்தையே உணர்ந்தீர் ஆவீர். இராமாவதாரத்தின் அடிப்படையை உணர்தல் வேண்டுமாயின் சீதாபிராட்டி கூறுவதை நீங்கள் நினைவிற் கொள்ளுதல் வேண்டும். வினை தன்னையும் விட்டுவைக்கவில்லை என்றும், துன்புறுதற்கென்றே தான் பிறந்துள்ளதாகவும் சீதாபிராட்டி கூறுகின்றாள். இலக்குமணனுடைய [செயலைச் சீதாபிராட்டியால் பொறுத்துக்கொள்ள முடிந்ததா? பரதன் அரியணையை ஏற்றுக்கொண்டிருந்தான் என்றால் என்ன நிகழ்ந்திருக்கும்? இலவ குசர்கள் இராமனை எவ்வாறு தோல்வியுறச் செய்தார்கள்? என்னுடைய தமிழ் நண்பர்கள் இராவணன் ஒரு பிராமணன் என்பதையும், இராமன் பிராமணன் அல்லாதவன் என்பதையும் நினைவிற்கொள்ளுதல் வேண்டும்.

முதல் கீதை :

இனி, கிருஷ்ணவதாரத்தை நோக்குவோம். பகவத்கீதை முதன் முதலாகத் தோன்றிய கீதை அன்று. முதற்கீதை அஷ்டாவக்ர கீதை ஆகும். ஜனக வைதேகிக்கும், அஷ்டாவக்ரர்க்கும் நடந்த உரையாடலே முதல் கீதை.

நீதியின் வன்மை :

இராமாவதாரம் இந்தியாவின் உயர்விஞ்ஞானத்திறனை விளக்குவதென்று கூறலாம். இந்தியாவிடம் பிரமாஸ்திரம் இருந்தது; நீதி வன்மை உடையதாக இருந்தது. அஸ்வமேத யக்ஞம் நீதி என்ன என்பதை முடிவு செய்வதாக இருந்தது. யார் அதிக வன்மையுடையவர் என்று அறிவதற்கும் அது

துணைபுரிந்தது. நீதிக்கும் ஊழுக்கும் இடையே நிகழ்ந்த போராட்டம் இராமாவதாரத்தில் தொடங்கிவிட்டதென்று கூற லாம். யார் வெல்வார்கள் ? நீதியா ? அல்லது ஊழா ? ஊழின் கருவிகள் யாவை ? இராக துவேஷங்களே ஊழின் தலையாய கருவிகள் எனலாம். உண்மையும், பொய்மையான ஆசையும் ஊழின் சாதனங்கள் ஆகும். ஆதலால்தான் கிருஷ்ணபகவான் ஊழின் சாதனங்களை வெல்லவேண்டும் என்றும், தெய்விகம் வெற்றிபெறச் செய்யவேண்டும் என்றும், நமக்கு உபதேசித் துள்ளார்; ஆகவேதான் கீதையில் " இராக துவேஷ விஹித " என்று கூறப்பட்டுள்ளது. இராக துவேஷங்களை விட்ட கணத் திலேயே ஊழ் செயலற்றுப் போகின்றது.

அறிவும் ஞானமும் கலந்ததே சமயம் :

இந்து சமயத் தத்துவந்தான் எத்தனை சிறப்பானது ? இப்போது உங்களால் வினையை வெல்லக்கூடுமா ? வினையை வெல்லுவது உங்களிடமே உள்ளது. இராக துவேஷங்களையும் மாச்சரியங்களையும் விட்டு நீங்கும் அக்கணம் முதலே வினையால் உங்களைத்தொடவும் தொடரவும் இயலாது. நீங்கள் அதன்பிடியி லிருந்து விடுதலைபெற்றவர்க ளாவீர்கள். ஆதலால்தான் இந்து மதம் அங்கே கடவுட்காட்சி உண்டு என்று உரைக்கின்றது. இராக துவேஷங்களை வென்றபொழுது உண்டாகும் அறிவும் ஞானமும் கலந்ததே சமயம். அதுவே இந்துமதம் இயம்புவது. கிருஷ்ண பகவான்கூட வசிஷ்டர் முன்பு தோன்றி அவரைக் குருவாக ஏற்றுக்கொள்கிறார்; ஏனெனில் வசிஷ்டர் ஞானமும், சிரத்தையும் கூடியவராக இருந்தார். ஞானமும், சிரத்தையும் கூடிய நிலையில் ஆளுநரும் வணங்கவேண்டிய நிலை பெறுகிறார். "யதா ராஜா ததா பிரஜா" (மன்னன் எப்படி மன்னுயிர் அப்படி) என்ற நாட்கள் கழிந்துவிட்டன. "யதா பிரஜா ததா ராஜா" (மன்னுயிர் எப்படி மன்னன் அப்படி) என்று ஆகி விட்டது இன்று. மக்களே இன்று மன்னர். நாங்கள் அரசர் கள் இல்லை. அவர்கள் மக்கள் இல்லை. மக்கள் எனக்குத் தலைவர். நான் அவர்கள் தொண்டன்.

பயன் தரும் சேவை :

ஆதலால் மக்கள் நல்லவர்களாக இருக்க இயலாவிட்டால் அரசு நல்லதாக அமைய இயலாது. ஆதலால் ஒரு கல்லூரி யைத் தோற்றுவித்து, அதன்வாயிலாக எண்ணற்ற ஏழை மக்கள் வாய்ப்புப் பெறக்கூடிய பல நிலையங்களை நடத்துதலாகிய ஒரு வேள்வியைப் புரிந்துவரும் குருமகாசந்நிதானம் அவர்களை நான் பெரிதும் பாராட்ட விரும்புகிறேன். இந்தியாவின் உண் மை அரசர்களாக விளங்கும் ஏழைமக்களுக்குப் பெரிதும் உதவு

கின்ற இக்கல்வி நிலையத்தைக் குருமகாசந்நிதானம் அவர்கள் நன்கு புரந்து வருகிறார்கள். இதுவே மேலும் பல்கிப்பெருகி, பல்லோர்க்கும் பயன்தரும் பெரும் சேவையாக வளரவேண்டும்.

திருக்கோயிலின் நோக்கம் :

மிகவும் கற்றுத்தேர்ந்த ஆசாரியர்களும், குருமகாசந்நிதானம் அவர்களும் வீற்றிருக்கும் இவ்விடத்தில் இந்துமதத்தின் உட்பொருளை உரைப்பதில் நான் சங்கோசமும் பெருமகிழ்ச்சியும் எய்துகிறேன். கோயிலுக்குச் செல்லுவதும், அங்குச் சென்று "கடவுளே! என்னுடைய பாவங்களை மன்னித்தருள்" என்று வேண்டியபிறகு பாவங்களை மேலும் செய்வதற்கு உரிமை பெறுவதும்தான் இந்துமதம் என்று கொள்ளலாகாது. ஒவ்வொரு முறையும் பாவச் செயல்களைப் புரிவதும், கோயிலுக்குப் போவதும், பாவங்கள் மன்னிக்கப்பெறுவதும், மீண்டும் பாவச் செயல்களைச் செய்வதும், மீண்டும் கோயிலுக்குப் போவதுமாக இப்படி மீண்டும் மீண்டும் செய்தல் இந்து மதத்துக்குப் பொருந்துமா? இதுவா இந்து மதம்? இல்லை, இல்லை. திருக்கோயிலுக்குச் செல்வது, உன்னை நீயே மாற்றி உயர்த்திக்கொள்ளவும், மீண்டும் பாவச்செயல்கள் புரியாத நிலைபெறவுமே; திருக்கோயில் இதற்கென்றே உள்ளது. திருக்கோயில் கடவுளை ஏமாற்றுவதற்கு அன்று; தெய்விகநிலை பெறவே திருக்கோயில். இதுவே திருக்கோயிலின் நோக்கம். ஆதலால் இந்துமதத்தைப் பொறுத்தவரை, சமயம் என்பது அறிவுமட்டுமன்று.

மனம் கங்கையாக வேண்டும் :

மனமே கங்கை என்று கூறப்படுகின்றது; மனமே கங்கை; ஆனால் நீங்கள் கங்கா நதியை நோக்கிப் போகவேண்டிய அவசியமில்லை. மனம் கங்கையாக ஆகவில்லை என்றால் நீங்கள் கங்கை நோக்கிப் போகத்தான் வேண்டும்; ஆனால் அது பொருளற்ற செயலே ஆகும். மனம் கங்கையின் தூய்மையைப் பெறுதல் வேண்டும். கங்கா நதியை நோக்கிப் போவதால் மனம் தூய்மை பெற்றுவிடாது; மனத்தைத் தூய்மையுள்ளதாக முதலில் ஆக்கிக்கொண்டுவிட்டால் கங்கை மனத்துக்குள் வந்துவிடும்: நீங்கள் கங்கை நோக்கிப் போகவேண்டிய அவசியம் ஏற்படாது.

அகத்தெழுச்சி :

நான் இங்கே வந்திருப்பதில் உள்ள அகத்தெழுச்சியை நோக்குதல் வேண்டும்; நான் காலம் கடந்து உண்பவன் அல்லன்; இன்று ஒன்றரை மணிநேரம் கடந்தும், என்னால் பேச முடிகின்றது; நான் வரவேற்கப்பட்டிருக்கும் இந்தப்

புனிதத் தலத்திலிருந்து, கீதையின் ஆற்றல் உண்மையிலேயே பொதிந்திருக்கும் இந்த ஞான நிலையத்திலிருந்து ஏழை மக்கட்குப் பெரிதும் உதவுகின்ற உண்மையான ஓர் நல்ல உணர்வுடன் புறப்படுகின்றேன். இதற்காகக் குருமகாசந்நிதானம் அவர்கட்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இந்த ஆதீனத்திலிருந்து இந்தியா ஒரு புதிய போக்கினைப் பெறும் என்று நம்புகின்றேன். இந்த நம்பிக்கையோடு இந்த வெள்ளிவிழாக் கொண்டாட்டங்களைத் தொடங்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி எய்துகின்றேன். என்னை இங்கு வர அழைத்தமைக்காக, குருமகாசந்நிதானம் அவர்களுக்கு என் வணக்கத்தையும் பெருநன்றியையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இமயத்தில் பொன்மலை

முனிவர்கள் விரும்பிய 'பிரும்ம கமல' மலர் உள்ள இடம்

இமயமலையின் மத்தியில் இயற்கை எழில் நிறைந்த 'பொன்மலை'யைக் கண்டு பிடித்துள்ளதாக இமயமலை ஆராய்ச்சியாளர் திரு. யு. கே. சுக்லா கூறுகிறார்.

மந்தாகினி, அலக்னந்தா, பாகிரதி- கங்கை ஆகிய நதிகள் உற்பத்தியாகும் இடங்களுக்குக் கீழே 3-கிலோ மீட்டர் தொலைவில் இந்தப் பொன்மலை உள்ளது என்றும் பனி மூடிய இந்த மலையின் சிகரங்கள் உயரம் 6000 மீட்டர் முதல் 70001 மீட்டர் வரை உள்ளதாகவும், இவை கோபுரம் போன்று அமைந்து, உச்சி கூராக உள்ளன என்றும், 20 ஆண்டுகளாக இமய மலையை ஆராய்ச்சி செய்துவரும் சுக்லா கூறுகிறார். பொன் மலையில் காணப்படும் பூக்களுக்கு ஈடு இணையே இல்லை என்றும் புராதன இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள 'பிரும்ம கமல' மலர் இங்கு இருப்பதைக் கண்டறிந்ததாகவும், இந்த அபூர்வமான மலர் முழு வளர்ச்சி அடைகையில் 10 செ. மீ. முதல் 12 செ. மீ. வரை அகலமுள்ளதாக இருக்கும் என்றும், இதை முகர்ந்து பார்த்ததும் சுகமான வாசனையுடன் உறக்கம் ஏற்படுத்தும் என்றும் கூறினர்.

தியானம் செய்வதற்குப் புராதன முனிவர்கள் ஏன் இந்த இடத்தைத் தெரிந்தெடுத்தார்கள் என்றால், தங்கள் இலட்சியத்தைத் துரிதமாக அடைய இந்த மலர் உதவியிருக்கின்றது என்றார். இயற்கைஎழில் நிறைந்த பொன்மலை, தேசிய தோட்டமாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்றும், ஆடுகள் இப் பகுதியில் மேய்வதைத் தடை செய்ய வேண்டும் என்றும் சுக்லா கூறியுள்ளார்.

— தினமணி 7—12—72.

கோ (பசு) பூஜையின் மஹிமை

சிவாகம வித்துவான், சிவாகமரத்நாகரம்
சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

सुरासुरैर्मध्यमानात् क्षीरोदादर्णवोत्तमात् ।
पञ्चगावस्समुत्पन्नाः सर्वलोकस्य मातरः ॥

नन्दाभद्रा च सुरभी सुशीला सुमना स्तथा ।
गावः शिवपुरात्पञ्च क्षितिं प्राप्ताश्शिवेच्छया ॥

முன்னொரு சமயம் பாற்கடலைக் கடையும்போது உத்தமமான அந்தப் பாற்கடலிலிருந்து எல்லாவுலகத்திற்கும் தாயாக நந்தை, பத்ரை, சுரபி, சுசீலா, சுமனா என்று ஐந்து பசுக்கள் உண்டாகி இறைவனை சிவபெருமானுடைய விருப்பத்திற் கிணங்கக் கயிலையங்கிரியினின்றும் பூமியையடைந்தன.

सर्व लोकोपकारार्थं देवानां तर्पणाय च ।
गोमातरः स्थिताभूमौ स्नानार्थं च शिवस्य च ॥

गोमयं रोचना मूत्रं क्षीरं दधि घृतं गवाम् ।
षडङ्गानि पवित्राणि सर्वसिद्धि कराणि च ॥

எல்லாவுலகிற்கும் நன்மையின் பொருட்டும், தேவர்களுக்கு ஹவிஸ் முதலான வடிவமாக அற்பணம் செய்யும்பொருட்டும் சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்யவேண்டியதின் பொருட்டும் தாய் போன்ற பசுக்கள் பூமியின்கண் இருக்கின்றன. இதை "ஆனிடத்தைந்துமாடும் அரன்பணி" என்று அருணந்திதேவர் கூறுகிறார். இவைகளின் பால், தயிர், நெய், கோஜலம், கோமயம், கோரோசனை இவ்வாறும் தூய்மையுள்ளன. தூய்மைப் படுத்தும் வல்லமையுள்ளன. சகல சித்திகளையுமளிக்க வல்லமையுடையன.

गोभिर्यज्ञाः प्रवर्तन्ते गोष्ट देवाः प्रतिष्ठिताः ।
गोभिर्वेदास्समुद्गीर्णा सषडङ्ग पदक्रमाः ॥

பசுக்களால் யாகங்கள் நடைபெறுகின்றன. பசுக்களிடத்தில் தேவர்கள் இருக்கின்றார்கள். பசுக்களிடத்தினின்றும்

ஆறு அங்கங்களுடன் கூடிய வேதங்கள் வெளிவந்தன. பசுக்களின் அங்கங்களில் பிரமன் முதலிய தேவர்களும் வீற்றிருக்கின்றார்கள். அதாவது கொம்புகளின் அடிப்பாகத்தில் பிரம விஷ்ணுக்களும், சிரசின் நடுவில் பூதகணங்களுடன் மஹாதேவனும் கொம்பின் நுனியில் சர்வ தீர்த்தங்களும், ஸ்தாவர ஜங்கமங்களான பொருள்களும், நெற்றியில் விநாயகனும், நாசிகையின் நடு எலும்பில் ஷண்முகனும், மூச்சுக்காற்றின் குழையில் நாகங்களும், காதுகளில் அச்வனி தேவர்களும், கண்களில் சூரிய சந்திரர்களும், பற்களில் மருத்துக்களும், நாக்கில் வருணனும், ஹும்காரத்தில் சரஸ்வதியும், கன்னங்களில் யமன் யக்ஷன் இருவரும், மேல் கீழ் உதடுகளில் காலை மாலை இரு சந்தியா காலங்களும், கழுத்தில் வாயு தேவனுடன் இந்திரனும், குளம்புகளின் நடுவில் கந்தர்வர்களும், குளம்புகளின் நுனியில் பன்னகர்களும், குளம்புகளுடைய பின்புறங்களில் அப்ஸர ஸ்திரீகளும், தசநாடிகளில் ருத்ரர்களும், எல்லா சந்திகளிலும் தச வாயுக்களும், பின்புறமுள்ள தட்டுக்களில் பித்ருக்களும், மார்பில் உமையும், அபானத்தில் இலக்குமியும், கோமயத்தில் ஆதித்யர்களும், கோமூத்ரத்தில் கங்கையும், உரோமங்களின் நுனியில் இருடிகளும், வயிற்றில் மலை காடுகளுடன் பிருதிவியும், முலைக் காம்புகளில் நான்கு சமுத்ரங்களும் இருக்கின்றன.

गोमयादुद्भितः श्रीमान् बिल्ववृक्षः शिवप्रियः ।
तत्रास्ते पद्महस्ता श्रीः श्रीवृक्षस्तेन चोच्यते ॥

கோமயத்தினின்றும் சோபையுள்ள சிவனுக்குப் பிரியமுள்ள வில்வ விருக்ஷம் உண்டாயிற்று. அதில் தாமரை மலருடன் கூடிய இலக்குமி வசிக்கிறாள். அதனால் அந்த வில்வமரத்திற்கு ஸ்ரீ விருக்ஷம் என்று பெயர் உண்டாயிற்று.

உலகத்தின்கண் மங்கலப் பொருள் எட்டினுள் பசுவும் ஒரு திரவியமாகும். அதாவது,

लोकेऽस्मिन् मङ्गलान्यष्टौ ब्राह्मणो गौर्हुताशनः ।
हिरण्यं सर्पिरादित्यः आपो राजा तथाऽष्टमः ॥

அரசன், அக்னி, ஆதித்யன், இரண்யம், புனல், நெய், பசு, அந்தணன் என்ற இவ்வெட்டும் மங்கலங்கள் எனப் பெயர்பெறும். இவை உலக நன்மைக்கு உபயோகப்படும் பொருள்கள்.

தினந்தோறும் காலையில் எழுந்து மௌனமாகப் பசுக் கொட்டிலில் சென்று கோகுலத்தை நமஸ்கரித்து, பழம் தாம்பூல

மளித்து கோசாவித்ரீ ஜபம் செய்யவேண்டும். ஆன்மார்த்த சிவபூஜையின் முடிவில் கபிலாபூஜை பசுக்களின்சமீபம் சென்று செய்யவேண்டும்.

आवाहयाम्यहं देवीं सुरभीं लोकमातरम् ।
पूज्यां त्रिभुवनेदेवैर्गन्धर्वैः किन्नरैस्तथा ॥
अमृतं श्रवसे देवि सर्व धर्म प्रवर्तिनि ।
तारयस्व महादेवि दुस्सहाद्दुःखसागरात् ॥

மூன்று உலகத்திலுள்ள தேவர்கள் கந்தர்வர்கள் கின்னரர்களால் பூஜிக்கப்படுபவளாய், உலகமாதாவாய் இருக்கிற தேவியான சுரபியை (காமதேனுவை) நான் ஆவாஹனம் செய்கிறேன். ஹே தேவி, எல்லாத் தருமங்களையும் செய்பவளே, அமிருதத்தைச் சுரப்பவளே, சகிக்கமுடியாததான துக்கசாகரத்தினின்றும் கரையேற்று என்று கூறி ஆவாஹனம் செய்யவேண்டும்.

आगावो अग्मन् என்ற வேதமந்திரம் சொல்லி ஆவாஹனம் முதலியது செய்து முன்கூறியவாறு அங்கபூஜை செய்து அன்னம், பழம், அருகு முதலிய கபளம் கொடுக்கவேண்டும். அவ்வாறு கபளம் கொடுக்கும்போது,

अमृत मथनोत्पन्नेत्पन्ने सुरभे लोकधारिणि ।
इमं ग्रासं गृहाणत्वं इदं मे व्रतमुत्तमम् ॥

அமிருதத்தின் பொருட்டுப் பாற்கடலைக் கடையும்போது உண்டானவளே, உலகத்தைக் காப்பாற்றுபவளே, ஹே சுரபி, நீ இந்த கபளத்தை ஏற்றுக்கொள். இது என்னுடைய உத்தமமான விரதம் என்றுகூறி இவ்வாறு செய்தால் பயங்கரமான பயத்தினின்றும் காப்பாற்றப்படுகிறான். பசுவைத்தொடுவதால் பாபங்களினின்றும் விடுதலை பெறுகிறான். வசிஷ்டர், விச்வாமித்திரர், ஐன்கு மகரிஷிகளால் வந்திக்கப்படும் கபிலையானவள் (பசு) எதுன முன்பும் பின்புமிருந்துகொண்டு என்னுடைய செய்யத்தகாத (செய்த) பாபங்களினின்றும் விடுதலை பெறச் செய்வாயாக.

गावोमे अग्रतः सन्तु गावोमे सन्तु पृष्ठतः ।
गावो मे हृदये नित्यं ग वां मध्ये वसाम्यहम् ॥

இந்த மந்திரத்தை மூன்று வேளைகளிலும் சொன்னால் சகல பாபங்களிலிருந்து விடுபெற்று முடிவில் முக்தி பெறுகிறான்.

— சகலாகமஸாரசங்கிரகம்.

அருளார்ந்த துர்க்கைத்தாய் அஷ்டாதச புஜங்களுடன்
தருமையா தீனத்தே தண்ணருளை வழங்குகிறாள்.

ஸ்ரீ காசி விசுவநாதர் திருக்கோயில் கோபுரவடிவில் அமைந்த



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி குருமூர்த்த ஆலய விமானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் முதலாண்டுக் குருபூஜை விழாவில் (29—10—72)

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வாழ்த்துரை வழங்குதல்

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி வெள்ளிவிழாவில்
(25—10—72)

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் அருளாசி வழங்குதல்

மதுரை ஆதீனத்திற்குச் சொந்தமான
திருப்புறம்பயம் திருக்கோயில் கும்பாபிஷேக விழாவின்போது

யாகசாலை தரிசனத்திற்கு எழுந்தருளிய
தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும்,
மதுரை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும்

32 அறங்கள்

உலக வாழ்க்கையில் மக்கள் அடைதற்குரிய உறுதிப் பொருள்கள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு எனப்படும். அறமாவது நூல்களில் விதித்தனவற்றைச் செய்தலும் விலக்கியவற்றை ஒழிதலும் ஆகும்.

அவ்வறங்களில் இன்றியமையாதன சிலவற்றைத் தொகுத்து 32 அறங்கள் எனக் கூறுகின்றன நூல்கள். அம்பிகை காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருந்து 32 அறங்களையும் செய்து காட்டிய சிறப்பைப் புராண வரலாறுகளில் காண்கின்றோம். இம் முப்பத்திரண்டு அறங்களை 'ஞானசம்பந்தம்' 32 ஆவது ஆண்டின் முதலிதழாக மலரும் இவ்விதழில் சிந்திப்பது மிக்க பொருத்தமுடையதாக அமைகின்றது.

1. ஆதுலர்க்குச் சாலை அமைத்தல் (வறுமையுற்றோர்க்கு இருப்பிடம்) 2. ஐயம் இடுதல் (பிச்சை) 3. *அறுசமயத்தோர்க்கு உணவு அளித்தல் 4. ஓதுவார்க்கு (கல்வி கற்பவர்க்கு) உணவு அளித்தல் 5. உடை கொடுத்தல் 6. ஏறு விடுத்தல் (காளை வளர்த்து விடுதல்) 7. காதோலை நல்கல் 8. பெண்போகம் அளித்தல் (திருமணம் செய்வித்தல்) 9. மகப்பால் வார்த்தல் (குழந்தைகட்குப் பால் வழங்கல்) 10. மகப்பெறுவித்தல் (மகப்பேற்றுக்கு உதவுதல்) 11. மகவு வளர்த்தல் 12. மருந்து நல்கல் 13. கொல்லாமல் விலைகொடுத்துக் காத்தல் (கொல்லப்பட இருக்கும் உயிரைமீட்டல்) 14. கண்ணாடி காட்டல் 15. பிறர் வீடு காத்தல் 16. கன்னிகாதானம் செய்தல் 17. சோலை வளர்த்தல் 18. வண்ணார் அளித்தல் 19. நாவிதர் தருதல் 20. சுண்ணமளித்தல் 21. மடம் கட்டித் தருதல் 22. தடம் (குளம்) அமைத்தல் 23. கண் மருந்து நல்கல் 24. தண்ணீர்ப்பந்தல் அமைத்தல் 25. தலைக்கு எண்ணெய் வழங்கல் 26. சிறைச்சோறு அளித்தல் (சிறையில் உள்ளவர்க்கு) 27. விலங்கிற்கு உணவு கொடுத்தல் 28. பசுவிற்கு வாயுறை வழங்கல் 29. அறவைப் பிணமடக்கல் (அநாதைப் பிணமடக்கல்) 30. அறவைத் தூரியம் அளித்தல் (மங்கல காரியங்கட்கு வாத்தியம் உதவுதல்) 31. தின்பண்டங்கள் நல்கல் 32. ஆவுரிஞ்சுதறி (பசுக்கள் உராயும் தறி) நாட்டல்.

---

* சைவம், வைணவம், காணபத்தியம், கௌமாரம், சௌரம், சாத்தம் இவைகளை அறுசமயம் என்று சொல்லுவதுதான்வழக்கம்.

ஆதுலர்சாலை, ஐயம், அறுசமயத்தோர்க் குண்டி,
ஓதுவார்க் குணவு, சேலை, உறும் ஏறு விடல், காதோலை
மாது போகம்மகப் பால்மகப் பேறு மக வளர்த்தல்
வேதை நோய் மருந்து கொல்லா விலைகொடுத்து உயிர்நோய்
[தீர்த்தல்

கண்ணுடி பிறரில் காத்தல் கன்னிகா தானம் காவே
வண்ணார் நாவிதரே சுண்ணம் மடம் தடம் கண் மருந்து
தண்ணீர் பெய் பந்தல் கோலத்தலைக் கெண்ணெய் சிறைச்
[சோறேடு
பண்ணுள விலங்கூன் நல்கல் பசுவின் வாயுறை கொடுத்தல்

அறவையாம் பிணமடக்கல் அறவைத் தூரியம் வருந்தா
நிறுவியே இடம் விடாமல் நிறையத்தின் பண்டம் நல்கல்
உறுதிஆ உரிஞ்சுகின்ற தறிஇவை ஓது மெண்ணுன்கு
அறநிலை அவிதானங்கள் அம்பிகை செய்யுமாறே.

—சூடாமணி நிகண்டு.

கடிதம் :

நெமலி,
1—12—1972.

உ
குருபாதம்

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் பொன்னார் திருவடிக்கு, பணிவன்பான வணக்கம் பல.

தங்கள் அருளாணையின்கீழ் நடைபெற்ற திருநெறியதெய்வத் தமிழ் மாநாட்டிலும், சமயப் பயிற்சி வகுப்பிலும், திருவிழா நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு பயன் பெறும் பேறு எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் அடியேனுக்குக் கிட்டியது.

ஞானபூமியாகிய தருமையில் தங்கிப் பெற்ற பல சமயப் பயிற்சியும், தங்கள் அருள் ஆசியும் பெறற்கரிய பேறு. அடியேன் பெற்ற பயிற்சியை மேலும் வளர்த்துக்கொள்ளவும், பலருக்கும் பயன்படச் செய்யவும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் அருளாசியைப் பெற விரும்புகிறேன்.

தங்கள் அன்புள்ள,
(ஒப்பம்) அ. அண்ணாமலை.

அருள்மொழியில் "ஐந்து"

எண்கள் சிலவற்றில் மக்கள் மனம் ஈடுபடுவதைப் பார்க்கின்றோம். திருவள்ளுவரும் ஏழு என்ற எண்ணில் அதிகமாக ஈடுபடுவதாகக் கூறுவர். சமயாசாரியர்கள் நால்வரில் முன்னவர் இருவரும் ஐந்தில் ஈடுபடுகின்ற அழகு நினைந்து இன்புறத் தக்கது. இதற்குச் சிறந்த காரணம் அவர்கள் உயிர்க்குயிராக எண்ணுகின்ற மந்திரம் ஐந்தெழுத்துக்களை உடையதாயிருப்பதே. இதனை அவர்கள் எவ்வெவ் வகையில் பொருத்திக் காட்டுகிறார்கள்?

"உலகத்தையே செயற்படுத்துகின்ற மன்மதன் அதற்குக் கருவியாகக் கொண்டுள்ள மலரம்புகள் ஐந்து. உலகிற்கு முதலாக உள்ள பூதங்கள் ஐந்து. தேவருலகில் உள்ள தெய்வ தருக்கள் ஐந்து. இறைவன் திருமேனியில் உள்ள பாம்பின் படம் ஐந்து. மந்திரத்தைச் செபிப்பவர் கையில் உள்ள விரல்கள் ஐந்து. எல்லா நலங்களையும் தருகின்ற சிவமூல மந்திரத்தில் உள்ள எழுத்துக்களும் ஐந்து".

கொங்கலர் வன்மதன் வாளி ஐந்துஅகத்து
அங்குள பூதமும் அஞ்ச வைம்பொழில்
தங்கர வின்படம் அஞ்சும் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செழுத் துமே.

—ஞானசம்பந்தர்

இவ்வாறே அப்பரும் ஐந்தாவன பலவற்றை அடுக்கிக்கூறும் அழகினைக் காணலாம்.

அஞ்சினால் இயற்றப்பட்ட ஆக்கை பெற்றதனுள் வாழும்
அஞ்சினால் அடர்க்கப்பட்டிங் குழிதரும் ஆதனேனை
அஞ்சினால் உய்க்கும் வண்ணம் காட்டினாய்க்கு அச்சம் [தீர்ந்தேன்
அஞ்சினால் பொலிந்த சென்னி அதிகை வீரட்டனீரே.

'அஞ்சிலே ஒன்று பெற்றான்' என்ற கம்பர் பாடலையும் இங்கு நினைவுகூரலாம்.

செய்திகள்

கந்த சஷ்டி விழா

வேளூரில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர்ஸ்ரீ வைத்திய நாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ செல்வமுத்துக் குமார சுவாமிக்குக் கந்த சஷ்டி விழா 7—11—72 முதல் 16—11—72 முடிய மிகச் சிறப்பாக நடைபெற்றது. பத்துத்திருநாட்களிலும் ஸ்ரீ ஆறுமுகருக்கும் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கும் ஷண்முகார்ச்சனரூபமான லட்சார்ச்சனைகள் நடைபெற்றன. பிரசங்க சபா மண்டபத்தில் 7—11—72 முதல் 12—11—72 முடிய உள்ள நாட்களில் நாள்தோறும் முறையே, செஞ்சொற் கொண்டல் திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., டிப்(மொழியியல்) 'பார்வதி திருமணம்' என்னும் தலைப்பிலும் திருநெறிச்செம்மல், திரு. வி. சா. குருசாமி தேசிகர் 'முருகன் திருவவதாரம்' என்னும் தலைப்பிலும், புலவர், திரு. இரா. செல்வக்கணபதி 'தேவர் துயரம்' என்னும் தலைப்பிலும், மகாவித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் 'அமரர் சிறை வீடு' என்னும் தலைப்பிலும், புலவர் திரு. வே. கண்ணப்பன் 'முசுகுந்தன் வரலாறு' என்னும் தலைப்பிலும் தருமையாதீனப் புலவர், மகா வித்துவான், திரு. சி. அருணைவடிவேலு முதலியார் 'வள்ளி திருமணம்' என்னும் தலைப்பிலும் விரிவுரை நிகழ்த்தினர். அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

மாயூரம் - குமரக்கட்டளையில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான மாயூரம் - குமரக் கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தில் 7—11—72 முதல் 12—11—72 வரை ஆறு நாட்கள் கந்த சஷ்டி விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவை ஒட்டி 10—11—72 அன்று செஞ்சொற்கொண்டல் புலவர் திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., 'அகத்தியர் வரலாறு' என்னும் தலைப்பிலும் 11—11—72 அன்று வித்துவான், திருமதி. ப. நீலா 'வீரவாகு தூது' என்னும் தலைப்பிலும் 12—11—72 அன்று புலவர், திரு. இரா. செல்வக்கணபதி 'சூரசம்காரம்' என்னும் தலைப் பிலும் சொற்பொழிவு ஆற்றினர். அன்பர்கள் பலர் கேட்டுப் பயன் பெற்றனர்.

சீகாழியில் :

தருமையாதீனம் சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் கந்த சஷ்டி விழா 7—11—72 முதல் 12—11—72 வரை ஆறு நாட்கள் நடைபெற்றது.

11—11—72 சனிக்கிழமையன்று புலவர், திரு. இரா. செல்வக்கணபதி 'அறுமுகன் ஆடல்' என்பது பற்றியும் 12—11—72 ஞாயிற்றுக்கிழமையன்று திருநெறிச் செம்மல், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர், 'தக்கன் வேள்வி' என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

திருக்கடவூரில் சங்காபிஷேகம்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் கார்த்திகைச்சோம வார நாட்களில் நடைபெறும், 1008 சங்காபிஷேகம், வழக்கம் போல் இவ்யாண்டும் 20—11—72, 27—11—72, 4—12—72 ஆகிய நாட்களில் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளிச் சங்காபிஷேக தரிசனம் செய்தார்கள். கார்த்திகைச் சோமவாரத்தை முன்னிட்டு, தருமையாதீன சமயப் பிரசாரகர், திரு. கோ. சிவஞானம் அவர்கள் "சோமவாரச் சிறப்பு", "அட்டவீரட்டச்சிறப்பு" ஆகிய தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர்கள். அன்பர்கள்பலர் சங்காபிஷேக தரிசனம் செய்தும், சொற்பொழிவுகளைக் கேட்டும் மகிழ்ந்தனர்.

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில்

சிவஞானசித்தியார் பாடவகுப்பு

சென்னை, சமயப்பிரசார நிலையத்தில், 19-11-72, 26-11-72 ஆகிய ஞாயிற்றுக்கிழமை நாட்களில் மாலையில் 6-30 மணி அளவில் சிவஞான சித்தியார் பாடவகுப்பு திருக்கோயில் ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல். அவர்களால் நடத்தப்பட்டது. பரபக்கம் பாடமாக நிகழ்ந்தது. அன்பர்கள் பலர் கலந்து கொண்டனர்.

நாயன்மார்கள் குருபூஜை விழா

5—11—72 ஞாயிற்றுக்கிழமையன்று பேராசிரியர், திரு. P. ஆலாலசுந்தரம் செட்டியார் அவர்கள் தலைமையில் சந்தானாசாரியர்களுள் முதல்வராகிய ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனுர் குருபூஜை விழா சிறப்பாக நடைபெற்றது. மெய்கண்டதேவர்

வரலாற்றைத் திருமதி. பாலமீரா சந்திரா அவர்கள் இன்னிசைச் சொற்பொழிவாக நிகழ்த்தினர்கள்.

7—11—72 அன்று பூசலார் நாயனர், 10—11—72 அன்று ஐயடிகள் காடவர்கோன் நாயனர், 21—11—72 அன்று கணம் புல்ல நாயனர், 29—11—72 அன்று மெய்ப்பொருள் நாயனர் 30—11—72 அன்றுஆனய நாயனர் குருபூஜை விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றன. வித்துவான், திரு. ப. வடிவேல் பிள்ளை அவர்கள் நாயன்மார்களின் புராண வரலாற்று விரிவுரை நிகழ்த்தினர்கள். தேவார வகுப்பு ஆசிரியர் மாணவர்களால் திருமுறைப் பாராயணமும் வழிபாடும் நிகழ்த்தப்பட்டன.

கந்தசஷ்டி விழா

சென்னை, சமயப்பிரசார நிலையத்தில் 7—11—72 முதல் கந்தசஷ்டி விழா சிறப்பாக நடைபெற்றது. சென்னை இந்து சமய அறநிலையத் துணை ஆணையர் திரு. A. வேங்கடாசலம் B. Sc., B. L., அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்தார்கள். திருக்கோயில் ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள் M.A., M.O.L., திரு. M. சந்திரசேகர முதலியார், அகில இந்திய வானொலி நிலைய இயக்குனர் திரு. மீ. ப. சோமசுந்தரம், திரு. K. E. அருணசல முதலியார், திரு. C. R. இராமசாமி, திரு. எஸ். ஜி. இரத்தினம் அய்யர் ஆகியோர் ஒவ்வொரு நாளும் முறையே விழாத் தலைமையேற்றுச் சிறப்புரை ஆற்றினர்.

மஞ்சக்குடி, திரு. இராஜகோபால சாஸ்திரிகள் வடமொழி சுலோகங்கள் மூலம் (ஸ்காந்தம்) கந்தபுராண விரிவுரையை நிகழ்த்தினர்கள். ஒவ்வொரு நாளும் நிலைய அன்பர்களின் உபயமாக ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி திருவுருவப்படத்திற்கு சகஸ்ரநாம அர்ச்சனையும், கந்தசஷ்டியன்று ஸ்ரீ சுப்பிரமணிய மூலமந்திர ஹோமமும் நடைபெற்றன. மறுநாள் ஏழைகளுக்கு அன்னம் அளிக்கப்பட்டது விழா நாட்களில் வித்துவான் ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை நன்றியுரை முதலியன கூறி உடனிருந்து நடத்திவைத்தார்கள்.

திருக்கார்த்திகை விழா

சென்னை சமயப்பிரசார நிலைய பூஜை மண்டபத்தில் திருக்கார்த்திகை விழா 20—11—72 திங்கட்கிழமையன்று நடைபெற்றது. திருமுறைப் பாராயணத்துடன் தீபவழிபாடு நிகழ்த்தி விளக்குகள் ஏற்றிவைக்கப்பட்டன. திரு. தெ. ஞானசுந்தரம், M. A., அவர்கள் 'திருக்கார்த்திகைச் சிறப்பு'ப் பற்றி விரிவுரை நிகழ்த்தினர்கள். அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

திரு. K. முத்துஜோதிடர்

(பரிதாபிஸு மார்கழிமீ 1உ முதல் 30உ முடிய)

(15—12—72 முதல் 13—1—73 முடிய)

ஷை மார்கழிமீ முதல் தேதி மாலை 26-57 நாழிகைக்கு விருஷப லக்னத்தில் நாலாவது யாமத்தில் ஸ்ரீலோகரக்ஷகரான சூரிய பகவான், விருச்சிகத்திலிருந்து தனுர்சங்கிரமணம் செய்கிருர். அதில் சனிபகவானும் அவருக்கு 7-ல் புதன் சுக்கிரனும் சஞ்சரிக்கிருர்கள். 8-ல் குரு, ராகு, சூரியன் சஞ்சாரம் செய்கிருர்கள். அதன் பலன் தக்ஷிணபாரதம் காவேரிதீரம் ஸஸ்ய தான்ய விருத்தியை மாத்திரம் தரும். அதற்கும் பாபபூமிகளில் ஈதிபாதைகளால் பலவித சிரமங்களையும் தரும். உலகெங்கும் அமைதி குறையும். தான்ய நஷ்டங்களும் பரஸ்பரவிரோதம் அதிகமாகுதலும் மானுஷாத்புதங்கள் திவ்யம் பௌமம் அந்தரிக்ஷாத்புதங்களும் காட்டும். தெய்வசக்தி உள்ள இடங்களும் புண்ணிய பூமிகளும் காப்பாற்றப்படும். மேலோர் பெரியோர்கள் ஆஸ்தீகர்கள் புண்ணிய புருஷர் எல்லோரும் உலக க்ஷேமத்தை பிரார்த்தித்துக்கொண்டு தேச தேசமாய் லக்ஷம்கோடி ஹோமங்கள் நடத்தவேண்டும். கடவுள் காப்பார், சுபமுண்டாகும்.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபபலனைத் தரும். அடிக்கடி சஞ்சாரபலன் உண்டாகும். தொழில் மாறுதல் ஏற்படும். வியாதி நிவர்த்தியாகும். ஜீவனம் விருத்தியாகும். உறவினர்களால் நன்மை உண்டாகும். வெள்ளி சனி சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். அடிக்கடி தொழில் மாறும். வீண் செலவுகளும் குடும்பத் தொல்லைகளும் அதிகமாகும். வரவு செலவு சமமாகும். சத்துருக்களால் உபத்திரம் உண்டாகும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபபலனைத்தரும். வம்சம் விருத்தியாகும். வியவகாரம் ஜெயிக்கும். உலகத்தில் பிரசித்தி ஏற்படும். தெய்வசக்தி ஓங்கும். எல்லாக்காரியமும் நன்மையாகவே நடக்கும். செவ்வாய் புதன் சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். குடும்பத்தொல்லை அதிகமாகும். சுபகாரியங்களில் செலவுகள் எதிர்பாராமல் ஏற்படும். புத்திராதிகளால் நன்மையும் ஏற்படும். அதிகமானசெலவுகளும் ஏற்படும்' வியாழன் வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். தூரதேச சஞ்சாரம் ஏற்படும். தெய்வீகத் தன்மை அதிகமாகும். ஜீவன விருத்தி ஏற்படும். ஆரோக்யம் உண்டாகும். மேலோர் பெரியோர்களால் நன்மை உண்டாகும். சனி ஞாயிறு சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். புதிதான தொழில் ஏற்படும். வியாபாரம் ஓங்கும். உலகத்தில் பிரசித்தி ஏற்படும். குடும்பம் ஓங்கும். நஷ்டமான பொருள் வந்து சேரும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். தொல்லைகள் அதிகமாகும். வரவுக்கு மிஞ்சின செலவுகள்

ஏற்படும். எப்பொழுதும் உபகாரத் தன்மை இருந்துகொண்டு இருக்கும். எங்கும் கீர்த்தி உண்டாகும். புதன் வியாழன் சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். ஆரோக்யம் குறையும். எதிர்பாராத சில இடையூறுகள் உண்டாகும். விசேஷமான சில செலவுகளும் நஷ்டங்களும் ஏற்படும். தெய்வபலம் உள்ளவர்களுக்கு எல்லாம் சௌகரியமாக இருக்கும். வெள்ளி சனி சுபமாகும்.

9. தனுசு - மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் பூர்ணமான சுப பலனைத்தரும். மேலோர் பெரியோர்களின் ஆசிகளால் அசாத்தியங்கள் எல்லாம் சுலபமான சாத்தியமாகும். படிப்பு விருத்தியாகும். கீர்த்தி ஏற்படும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

10. மகரம்–உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தையே கொடுக்கும். உத்தியோகத்தில் மேல்பதவி கிடைக்கும். வியவகாரம் ஜெயிக்கும் மனம் அமைதியாக இருக்கும். குடும்பம் ஓங்கும். உழைப்பு அதிகமாக இருந்துகொண்டு இருக்கும். செவ்வாய் புதன் சுபமாகும்.

11. கும்பம் – அவிட்டம் ½-சதயம் –பூரட்டாதி–¾

கும்பராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபபலனைத்தரும். புதிதாக வஸ்திராபரணச் சேர்க்கைகள் ஏற்படும். தனதான்ய விருத்தி ஏற்படும். துக்கம் நிவர்த்தியாகும். எல்லாக் காரியமும் சுலபமாகச் சாதிக்கமுடியும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி

மீனராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபமாகவே இருக்கும். தெய்வ காரியங்களும் பிதுரு காரியங்களும் நன்கு நடக்கும். பலவிதத்தில் பொருள்கள் சேரும். ஆரோக்யம் தரும். எல்லாக் காரியங்களும் வெற்றியடையும். சுபம் உண்டாகும். சனி ஞாயிறு சுபமாகும்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

"ஞானசம்பந்தம்"

முப்பதாம் ஆண்டுமலர்ப் பொருளடக்கம்

எண்		பக்க எண்
1	அண்ணுமலை என்னும் அற்புதம்	25
2	அப்பர் தேவாரத்தில் விநாயகர்	160
3	அப்பர் பெருமான் தமிழ்க் காவலர்	360
4	அமைதிக்குப் பிரார்த்தனை	1
5	அருளுருக் காட்சி	337
6	அறுமுகச் சிவன்	649
7	அன்னையர் இன்னருள்	585
8	ஆசியுரை	561
9	ஆலய வழிபாடுபற்றி அண்ணல் காந்தியடிகள்	71
10	ஆழ்வார் அழகனுபவம்	31, 84, 137
11	இரணியன்வதைப் படலம்-தத்துவநோக்கு	403, 481
12	இருவகைப் புணர்ச்சியில் எழுத்துப்பேறும் சாரியையும்	630, 672
13	இறைவன் - கடவுள் - இயவுள்	620
14	இன்றி வினையெச்சமாற்றம்	489
15	உலகியல் உணர்ந்தவர் சேக்கிழார்	495
16	எதிர்காலம்	51, 113, 172, 233, 280, 333, 387, 451, 515, 580, 643, 699
17	எம்பாவை வழங்கும் இன்னருள்	59
18	ஏழாந்திருமுறையில் சாத்திர நோக்கு	634
19	ஏழில் ஓர் எழில்	237
20	ஒருமரபு	220
21	கவிமணியின் கவிதைகள்	685
22	கற்பனைக்குக் கம்பன்	492
23	காசியாத்திரை அனுபவங்கள்	36

எண்		பக்க எண்
24	காண்போம் அவர் திருப்பாதம் கண்டறியாதனகாண	177
25	கும்பாபிஷேக விழாவில் வாழ்த்துரைகள்	271
26	குருவருள்	399, 462, 528, 589, 656
27	கொல்லிமலைத்தமிழ் ஓர் அறிமுகம்	608
28	கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான்	73, 153, 325, 366, 421, 486, 614, 680
29	சித்த வைத்தியசாலை	54, 391, 455, 518, 583 646, 702
30	சித்திரைச் சிறப்பு	285
31	சிதம்பரத்தில் வரவேற்பு	569
32	சிந்தியாகமம்	225, 316
33	சிவமாநகர்	117
34	சிவாகமசார சர்வஸ்வம்	41, 93, 149, 197, 381, 430, 503, 554, 626, 689
35	செய்திகள்	50, 107, 190, 231, 278, 330, 385, 449, 507, 575, 636, 693
36	சேக்கிழார்காட்டும் நாடுகளும் ஊர்களும்	550, 605
37	ஞானசம்பந்தம் இருபத்தொன்பதாவது ஆண்டுமலர்ப் பொருளடக்கம்	i
38	தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு விண்ணப்பம்	480
39	தித்திக்கும் தீபாவளி	598
40	திருத்தருமையாதீனம் ஸ்ரீ'ஞானபுரீசுவரசுவாமி மகோற்சவப் பத்திரிகை	i
41	திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு	441
42	திருமஞ்சனம்	393
43	திருமந்திரம் - குறிப்புரை	27, 80, 145, 193, 252, 297, 357, 407, 473, 537, 623, 669
44	திருவருள் அழைப்பு	I
45	திருவருட்பயன் விளக்கவுரை	45, 129, 189, 294, 351, 425, 467, 558, 592, 660
46	திருவள்ளுவர் வீட்டியல் வித்தகர்	414
47	திருவூடல்	97
48	திருவையாற்றில் கும்பாபிஷேகம்	166, 216, 301
49	திருவையாற்றில் திருக்குடமுழுக்கு	90
50	திருவையாற்றில் திருநெறிய தெய்வத் தமிழ்மாநாடு	306

எண்		பக்க எண்
51	திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி	21, 76, 141, 205, 256, 321, 353, 410, 476, 540, 601, 665
52	தீபார்ச்சனை	3
53	தோத்திரமும் சாத்திரமும்	10, 65, 123, 182, 243, 289, 343
54	நன்னூலுள் ஒரு நன்னூல்	210
55	நவராத்திரி	596
56	பாரதியார் பாட்டு நலம்	662
57	புத்தாண்டு	270
58	புத்தாண்டு வாழ்த்து	1
59	புறப்பாட்டும் அறப்பாட்டும்	469, 544
60	புறப்பாட்டில் புதுமை ஒளி	434
61	பொங்கல் வாழி	57
62	மகாகும்பாபிஷேகம்	230, 260
63	மனவன விலங்கு அரி, நரி, கரி	534
64	மாண்புமிகு, க, அன்பழகன் அவர்கள் ஆற்றிய பேருரைச் சுருக்கம்	346
65	மாண்புமிகு. கே. வி. சுப்பையா அவர்களின் தலைமையுரைச் சுருக்கம்	107
66	முதிய நல்லாடி	457
67	மூல முதற்கரு	521
68	யமன்	133, 201, 499
69	வாழ்த்து	571
70	ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் ஆசியுரை	248
71	ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தலைமைக்கவிதை	374

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

" ஞானசம்பந்தம் "

முப்பத்தொன்றும் ஆண்டுமலர்ப்

பொருளடக்கம்

எண்		பக்க எண்
1	அட்டைப்பட விளக்கம்	ii
2	அருந்தவச்செல்வர்	373
3	அருள் விளக்கு	333
4	அறநிலையங்களும் குடிமக்களும்	277
5	ஆசியுரை	392
6	ஆடிப்பூர விழா	535
7	ஆரூர் அறநெறி	248
8	ஆவணிமூலத் திருநாளில் வழங்கியருளிய ஆசியுரை	584
9	ஆளுடை அடிகளின் அருள் திருநாள்	429
10	ஆனிடத்தைந்தும் ஆடும் அரன்பணி	224
11	இருவகைப் புணர்ச்சியில் எழுத்துப்பேறும் சாரியையும்	44, 121, 193
12	இளைய ஒளி	116
13	இறைவன் சிரிக்கிறன்	577
14	உதிர்ந்த மலர்களில் பொறுக்கிய மலர்கள்	108
15	எதிர்காலம்	93, 162, 217, 272, 329, 370, 426, 482, 538, 602, 658, 714
16	ஏழாந் திருமுறையில் சாத்திர நோக்கு	41
17	ஐவகை யாகங்கள்	501, 630
18	கண்ணீர்ப் பூக்கள்	621
19	கணபதி என்னும் களிற்றினைத் தொழுவோம்	i
20	கடவுள் உண்டா	256
21	கடிதம்	179, 261, 709

எண்		பக்க எண்
22	கயிலைக் காட்சி	485
23	கலைமகள் வாழ்த்து	614
24	கவிமணியின் கவிதைகள்	139
25	குருபரம்பரை	16
26	குருபூஜை	386
27	குருமணிகோயில் குடமுழுக்கு	605
28	குருலிங்க சங்கமம்	661
29	குருவருள்மொழி	11
30	குருவழிபாடு	319
31	கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான் 190, 243, 305, 351, 462, 511, 573, 648, 675	132
32	கோடைக்கால சமய விரிவுரைப் பயிற்சி வகுப்பு	405
33	சக்தி வழிபாடு	610
34	சமய ஒருமைப்பாடு	389
35	சிதம்பரத்தில் சிவநேசச் செல்வர்கள் குருவழிபாடு	209
36	சிதம்பரத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆசியுரை	173
37	சிவஞான தானவிதி	293
38	சிவராத்திரி விரதம்	105
39	சிவாகமங்களைப் பூசிக்கும் முறைமை	355
40	சிவாகம சார சர்வஸ்வம்	135
41	சீகாழி நகரமக்களின் குருவழிபாடு	325
42	சுதந்திரதின வெள்ளிவிழா	546
43	செய்திகள் 84, 154, 212, 263, 323, 364, 420, 479 537, 598, 653,	712
44	சைவப்பெரியார் மறைவு	க
45	ஞானசம்பந்தம் ஆற்றிய நற்பணிகள்	6
46	தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களுக்கு அளித்த வரவேற்புரை	707
47	தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் பேருரை	701
48	தமிழ்நாடு ஆளுநர் மேதகு. கே. கே. ஷா அவர்களுக்கு அளித்த வரவேற்புரை	704
49	தருமபுர ஆதீனத்தால் தமிழுக்குக் கிடைத்துள்ள லாபங்கள் !	288

எண் பக்க எண்

50 தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியின் தோற்றமும் வளர்ச்சியும் 491
51 தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியின் வெள்ளி விழா 689
52 திருக்கயிலைமலையிலே 181
53 திருக்குடமுழுக்குப் பெருவிழா 543
54 திருத்தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி கோயில் மகோற்சவப் பத்திரிகை திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சி i
55 திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு 395, 469, 531
56 திருப்புறம்பயம் வழிபாடு 615
57 திரு. பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை, M. A., L. T., அவர்கள் ஆற்றிய உரைச் சுருக்கம் 589
58 திருமந்திரம் - மூலமும் உரையும் 125, 237, 298, 343, 449, 515, 569, 635, 677
59 திருவருட்பயன் விளக்கவுரை 112, 230, 338, 445, 640, 562
60 திருவருள் அழைக்கிறது 97
61 திருவாரூர் சித்தீச்சுரம் 309
62 திருவையாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதி 37, 117, 186, 301, 347, 452, 518, 523, 565, 626, 672
63 நவராத்திரி விளக்கம் 638
64 திருதி 145
65 பக்தர்கள் பணிவுரைக் கூட்டமும் நினைவுமலர் வெளியீடும் 49
66 பங்குனி உத்தர நாள் 165
67 பழையன கழிதலும் புதியன புகுதலும் 101
68 பாரதியார் பாட்டு நலம் 33, 128, 240
69 பார்வையாளர் குறிப்பு. 236, 242, 255, 271, 300, 313, 337, 346, 354, 404, 406, 411, 414, 435, 448, 455, 478, 481, 504, 510, 514, 517, 522, 536, 629, 634
70 புத்தாண்டு வாழ்த்து 287
71 பூசை முடிந்தது 440
72 பெருந்துறவி 407
73 பொங்கல் வாழ்த்து 115

என்		பக்க என்
74	மதிப்புரைகள்	361, 362, 363
75	மறைஞானசம்பந்தர்	549
76	மாயூரம் சிவநேசச்செல்வர்கள் குருவழிபாடு	201
77	மாயூரத்தில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை	169
78	முடவன் வாய்க்கால்	505
79	வணக்கவுரை	178
80	வாழ்த்தும் அஞ்சலியும்	68, 149, 197, 257, 314, 358, 415, 456, 526, 594, 651
81	வாழ்த்தும் வணக்கமும்	1
82	ஸ்ரீ காசியில் முக்தியடைந்த அருள்நந்தி முனிவர்	382
83	ஸ்ரீ மெய்கண்ட தேவர் குருபூஜை விழா	619
84	ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி முதலாண்டுக் குருபூஜை குருமூர்த்த ஆலய மகாகும்பாபிஷேக விழா	680
85	ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தி முனிபுங்கவர்	382
86	ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வாழ்த்துரை	697
87	ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அருளுரை	106, 436, 592, 616
88	ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆசியுரை	8, 283, 380, 474, 555, 669, 686
89	ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வாழ்த்துரை	63

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி குருமூர்த்த ஆலய மண்டலாபிஷேக நிறைவு விழா

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருமூர்த்த ஆலய குடமுழுக்கு விழா 29—10—72 அன்று மிகச் சிறப்பாக நிகழ்ந்ததை அனைவரும் அறிவர். அதையொட்டி நிகழும் மண்டலாபிஷேக நிறைவு விழா, 26 ஆவது குருமகா சந்நிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின்வண்ணம் 12—12—72 செவ்வாய்க்கிழமையன்று காலை விசேஷ அபிஷேக ஆராதனை களுடனும் நூற்றெட்டுசங்காபிஷேகத்துடனும் சிறப்பாக நிகழும். அன்பர்கள் வந்துதரிசித்துக் குருவருள் பெற்று உய்வார்களாக.